# செம்பதாகை

மலர்: 4
1982
இதழ்: 7-8
விலை ரூபா: 1-00
புரட்சிகர வெகுஜன ஏடு


# ஜனாதிபதித் தேர்தல் எவ்வாறு நடைபெறும்?

விரைவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலும், அதைத் தொடர்ந்து நடாத்தப்படும் பொதுத் தேர்தலும் எவ்வாறு நடாத்தப்படும் என்பதையிட்டு மக்கள் பலமாகச் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர். பெயரளவிற்கான தேர்தலாக அமையுமா அன்றி மக்களின் அபிலாஷைகளுக்கு சுதந்திரமான சந்தர்ப்பம் அளிக்கும் தேர்தலாக அமையுமா என்ற கேள்வி ஏற்கனவே நாடு முழுவதும் எழுப்பப்பட்டுள்ளது.

## ★ சுதந்திர வாக்களிப்பு இடம்பெறுமா?
## ★ உலகின் கவனம் இலங்கையின் பக்கம்!

அண்மைக்காலம் வரை புகழப்பட்டு வந்த இலங்கையின் பாராளுமன்ற ஜனநாயக முறையானது சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகள் பறிக்கப்பட்ட அன்றே தன் அழிவிற்கான அதிகாரபூர்வமான அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டது. அரசாங்கம் ஜனாதிபதி தேர்தலைத் துரிதப்படுத்துவதற்கான காரணம் என்ன? முன்பு யூ.என்.பி. செய்த கணிப்பு மிகவும் தவறிவிட்டது. அன்று 'பாராளுமன்றத் தேர்தலில் 40 — 45% ஆசனங்களையாவது பெறலாம். ஜனாதிபதியின் அனுசரணையுடனும் கட்சிமாறிகளது துணையுடனும் மீண்டும் பெரும்பான்மையைப் பெறலாம் என்ற எதிர்பார்ப்பே பாராளுமன்றத் தேர்தலின் பின்பு ஜனாதிபதித் தேர்தலை வைக்கும் எண்ணத்தைத் தூண்டியது அவர்கள் எதிர்பார்த்ததைவிட அரசாங்கத்தின் செல்வாக்கு இன்று மிகவும் இறங்கிவிட்டது. 1981இல் ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியில் ஏற்பட்ட பிளவை பாவித்து 1982இல் தேர்தலை வைக்க யோசித்ததை எல்லாம் 'சூரிய பகவானும்' 'வருண தேவனும்' வஞ்சித்துவிட்டார்கள்.

இப்போது எந்தவிதமான ஏமாற்றுவித்தை மூலமாவது ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றுவிட்டால் பின்பு பாராளுமன்றத் தேர்தலைச் சமாளித்துவிடலாம் என்று கணிக்கின்றார்கள். யூ.என்.பி க்கு த.வி. கூட்டணியினர் தொண்டமான் ஆகியோரின் மறைமுக — நேரடி ஆதரவுண்டு. சிறுபான்மை இனத்தவர்களது ஆதரவைத் திரட்டுவதில் யூ.என்.பி.யின் அக்கறையை மத்தியூ முனிவர் மோனத்தவம் பூண்டிருப்பதன் மூலம் அடையாளம் காண முடியும். த.வி. கூட்டணிக்கு கக்கவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலை. இவர்களுடைய சங்கடத்தை தமக்கு ஆதரவு என்று பகிரங்கமாக யூ.என்.பி. வியாக்கியானம் செய்தது. ஈ.விடுதலை அணி எடுக்கும் நிலைப்பாட்டில் ஓரளவு தங்கியுள்ளது. குமார் பொன்னம்பலம் போடும் காரணங்கள் எல்லாம் ஜே. ஆர். ருக்கு இரண்டாம் தானத்தை அளிக்கவேண்டாம் என்று அவர் பிரசாரம் செய்வது போல் தோன்றுகிறது ஜே.வி.பி. யும் மைத்திரிபால சேனநாயக்காவும் தம் ஆதரவாளர்களிடம் ஜே.ஆர் ருக்கு இரண்டாம்தானத்தை தருமாறு மறைமுகமாகவேனும் கேட்டுக் கொள்வார்கள் என்பது எதிர்பார்க்கக் கூடியது. இந்தச் சூழ்நிலையில் யூ.என்.பி. யின் கூட்டாளிகளான இவர்களைத் தவிர்ந்த சகல உண்மையான யூ.என்.பி. விரோத சக்திகளும் ஒன்று படாவிட்டால் ஜே. ஆர். மீண்டும் அதிகாரத்திற்கு வருவது சாத்தியமாகிவிடும் ஆபத்து எப்போதும் உள்ளது.

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## தார்மீகத்தின் கீழ் இப்படி!

“இலஞ்சமும் ஊழலும் பொதுத்துறையில் ஒரு வாழ்க்கை முறையாகி விட்டது. இலஞ்ச ஊழல் பேர்வழிகளைக் கண்டு பிடித்து சட்டத்தின் முன் கொண்டுவர முடியாத நிலையிருக்கிறது. இலஞ்சப் பேர்வழிகளை அவர்களது சகாக்களே காப்பாற்றி விடுகிறார்கள். இவற்றை ஒழித்துக்கட்ட நடைமுறைச் சட்டங்களுக்கு வலுவில்லை. நீதித்துறையைக் கூட இலஞ்ச ஊழல் விட்டு வைக்கவில்லை. நான் 5-ஆண்டுகளாக பிரதம நீதியரசராக இருந்து வருகிறேன். என் பதவிக்காலத்தில் ஒரு வாரம் கூட ஒரு நீதிமன்ற ஊழியர் மீதாவது லஞ்சப் புகார் வராமல் கழிந்தது இல்லை. நீதிமன்றப் பதிவேடுகள், பத்திரங்கள் என்பன லஞ்சத்தின் விளைவாக திருத்தப்படுகின்றன, திருடப்படுகின்றன.”

பிரதம நீதியரசர்
திரு. நெவில் சமரக்கோன்

### தாழ்த்தப்பட்ட மக்கள்
# சாதி அடக்குமுறைக்கு பலியாகின்றனர்
## போராட்டமே ஒரே மருந்து!

சாதிமுறையும் — தீண்டாமையும் ஒழிக்கப்பட வேண்டும் என்று பாரதி விழாக்கள்தோறும் பேசப்படுகிறது. “தமிழ் ஈழ சமதர்ம சோஷலிசக் குடியரசை” நிறுவுவதற்கு சாதி தீண்டாமை ஒழிய வேண்டும் என்று கூட்டணித் தலைவர்கள் கூக்குரலிடுகின்றனர். அதன் முன்னோடியாக உடுப்பிட்டிக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட சபைக்கு இரண்டு உறுப்பினர்களையும் தெரிவுசெய்திருக்கிறோம் என தமிழ்த் தலைவர்கள் வாய்சலிக்க கத்திவருகின்றனர். இப்போதாதென்று கிராமோதய சபைகளிலும், பிரதேச சபைகளிலும் தாழ்த்தப்பட்டவர்களை நியமித்து மற்றும் சிலருக்கு சமாதான நீதிபதிப்பட்டங்களும் வழங்கப்பட்டுள்ளது. இவையனைத்தாலும் சாதி அடக்குமுறையையும் அதன் வெறித்தனத்தையும் முடிவுக்குக் கொண்டு வர முடியவில்லை.

அண்மையில் புன்னாலைக் கட்டுவன் பகுதியில் ஐந்து பிள்ளைகளின் தந்தையான இ.போ.ச. சாரதி வெ. அண்ணாச்சாமி என்பவர் சாதிவெறியரினால் கோரமான முறையில் கொலைசெய்யப்பட்டார். சாதிவெறியின் கோரத்தனத்தை ‘முடிக்கட்டும்’ தமிழ்ப் பிரமுகர்களும், சட்டத்தின் காவலர்களும் அது தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல் பிரச்சினை எனக்காட்ட முற்பட்டனர். ஆனால் உண்மை சகலரும் அறிந்ததே. ஆள் வெட்டப்பட்டு கோரத்தனமாக கிடந்த அதேவேளை சட்டம் காக்கும் தேவதைகள் வாழைகள் வெட்டப்பட்டதைப்பற்றி அக்கறைகொண்டு வாழைகள் வெட்டியவர்களை தேடிப்பிடிக்க ஓடித்திரிந்த காட்சி இவர்கள் யார்பக்கத்தில் நிற்கிறார்கள் என்பதை

( 8 ஆம் பக்கம் பார்க்க )

### சாதிவெறியின் கோரத்தனம்



வடபகுதியில் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வெள்ளையன் அண்ணாச்சாமி என்ற இ.போ.ச. சாரதி சாதி வெறியினால் கை, கால்கள் துண்டாடப்பட்டு கோரக் கொலைக்குள்ளாகிக் கிடக்கும் காட்சி.

# அந்நியர் ஆலோசனையுடன் மீண்டும் ஆட்சிக்குவரமுடிவு

தேர்தலோ தேர்தல்களோ எப்பொழுது நடக்கும் என்பது இன்னும் சரியாக அறிவிக்கப்படாது இருந்த போதிலும், தேர்தல் ஜுரம் ஏறிவருகிறது. அரசு உடமையாயுள்ள பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி முதலிய வெகுஜன சாதனங்களும், நாட்டின் முதலாளித்துவ பத்திரிகைகளும், பல அரசியல்கட்சிப் பத்திரிகைகளும் தேர்தல் நாடகத்துக்கு சுவையூட்டி செய்திகளையும், கட்டுரைகளையும் எழுதி வருகின்றன. ஜனநாயகமே குழிதோண்டிப் புதைக்கப்பட்டு வரும் இவ்வேளையிலும் தேர்தல் மாயை என்னும் அரங்கிலே கட்சிகளின் நாடகங்கள் ஒத்திகை பார்க்கப்படுவது வேடிக்கைதான். நாட்டை எதிர்நோக்கும் அதி பயங்கரமான பொருளாதார நெருக்கடி, வல்லரசுகளின் ஊடுருவல், உலகவங்கியின் இறுக்கமான பிடி, கலாசார சீரழிவு, தேசிய சிறுபான்மையினரின் அவலம் இவற்றையெல்லாம் முக்கியமான பிரச்சினைகளாகக் கண்டு பொதுவான வேலைத்திட்டங்களை வகுத்து, பொதுஜனப் போராட்டங்களுக்கு ஆயத்தம் செய்வதற்குப் பதிலாக ஜனாதிபதியாக யார், பிரதமராக யார் என்றெல்லாம் அந்தரங்க பேச்சுவார்த்தைகளிலும் பத்திரிகை அறிக்கைகளிலும் எதிர்க்கட்சியினர் காலங்கழித்து வருகின்றனர். நாம் அடிக்கடி இப்பகுதியில் சுட்டிக்காட்டி இருப்பதைப் போல இன்றைய காலகட்டத்தில் புரட்சிகர நடவடிக்கைகளின் அடிப்படையிலே பரந்துபட்ட ஏகாதிபத்திய- யூ என்.பி. எதிர்ப்பு முன்னணியே முதல் தேவையாகும். மக்களிடையே பரப்பப்பட்டுள்ள பல மாயைகளைக் களைந்து அரசியல் தெளிவு ஏற்படுத்துவது முக்கியமான பணியாகும். அபேட்சகர்களையும், தலைவர்களையும் தேர்ந்தெடுப்பது கேலிக்கூத்தாகவே இருக்கும்.

பெரும்பாலான எதிரணி கட்சிகள் இவ்வாறு நேரத்தை பழைய பந்தாவிலே செலவழித்துத் தம்மைதாமே ஏமாற்றிக் கொண்டிருக்கையில் அரசும் அரசாங்கக் கட்சியும் சும்மா இருக்கவில்லை. இங்குள்ள 'மூளைகள்' போதாதென்று அமெரிக்க, ஜெர்மனிய, பிரித்தானிய 'ஆலோசகர்கள்' பல்வேறு துறைகளிலும் புத்திமதி கூறுவதற்காக இங்கு வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றார்கள். இன்று நமதுநாட்டில் முப்பதினாயிரம் அன்னியர்கள் வசிப்பதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இவர்களிற் பெரும்பாலானோர் அரசின் ''திறந்தபடலைக்'' கொள்கையினால் கொந்தராத்துக்காரராயும், கம்பனிப் பிரதிநிதிகளாயும், ஏஜண்டுகளாயும் நிபுணர்களாயும், வியாபாரிகளாயும் வந்திருக்கின்றனர். ஆனால் கணிசமானோர் அந்தரங்கமாக அரசுக்கு ''ஆலோசனை'' வழங்குவோராகவிருக்கின்றனர். எதிர்க்கட்சிகளைச் சார்ந்த ஏடுகள் இத்தகையோரின் நடவடிக்கைகள் சிலவற்றை அடிக்கடி அம்பலப் படுத்தி வந்திருக்கின்றன.

இவர்களின் ஆலோசனையின் பேரிலேயே யூ.என்.பி.யும் தேர்தல் பிரசார குழு ஒன்றை நியமித்துள்ளது. திலக் ரத்னகார, விக்கிரமவீரசூரிய உட்பட ஐவர் அடங்கிய அந்த குழுவில் இப்பொழுது தமிழர் ஒருவரும் நியமிக்கப் பட்டிருக்கிறாராம். விவசாய அமைச்சின் மேலதிக செயலாளராக இருந்து ஈ. எல். சேனநாயக்கா இராஜினாமா செய்த காலத்தில் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப் பெற்ற இவ்வதிகாரி குணசிங்கம் இப்பொழுது தேர்தல் பிரசாரகுழுவிற்கு தமிழ் விவகார ஆலோசகராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

வெளிநாடுகள் பல எதிர்வரும் தேர்தலில் பெரும் பங்கு வகிக்கும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஐரோப்பிய பத்திரிகை நிருபர் ஒருவர் குறிப்பிட்டதுபோல, இவ்வளவு கோடானுகோடிக்கணக்கில் நிதியுதவியைக் கொட்டிவிட்டு, அந்நாடுகள் நமக்கு என்ன என்று இருந்துவிட முடியுமா? எப்படியாவது ஆளும் கட்சி மீண்டும் அதிகாரத்துக்கு வருவதையே அந்நாடுகள் விரும்பும்; அதற்கு வேண்டியவற்றைச் செய்யும். இதுகாலவரை இந்த அரசாங்கத்துக்கு உலகவங்கியும் சர்வதேச நாணயசபையும் நிதி வழங்கிவந்தன. ஆனால் அவை வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளின் அமைப்புகள் மூலமாகவும், தனிப்பட்டவங்கிகளின் மூலமாகவும் பெரும்-கடன்களை வழங்கின. பொதுவில் இந்நாடுகள் இங்கு சில வேலைப் பிரிவினைகளை ஏற்று இயங்கி வந்திருக்கின்றன. அமெரிக்கர்கள் நிதி, வெளிநாட்டுக்கொள்கை, அரசியல்தந்திரோபாயம் முதலிய விஷயங்களில் ஆலோசனை கூறி வருகின்றனர்; பிரித்தானியர் கல்வி, கலாசாரம், தொழில்நுட்பம், உயர்கல்வி முதலிய துறைகளில் ஆலோசனையும், உதவியும் வழங்கிவருகின்றனர்; ஜெர்மனியர் குறிப்பாக இலங்கைமன்றக் கல்லூரியின் ஊடாக, வெகுஜன தொடர்பு சாதனங்களை நடாத்துதல், நிர்வாகிகட்கு பயிற்சி அளித்தல், கருத்தரங்குகள் ஒழுங்குசெய்தல், தத்துவார்த்தத் துறைகளில் போதனை அளித்தல், முதலிய கடமைகளைச் செய்துவருகின்றனர்; ஜப்பானியர் பொருள் உற்பத்தி, நுகர்வு முறை, விற்பனை விளம்பரம் முதலிய விவகாரங்களில் நிபுணர்களாக இயங்கி வருகின்றனர்: இவற்றுடன் சிறிய சில நாடுகளும் சில்லறை உதவிகள் ஆற்றிவருகின்றன. இவையெல்லாம் தேர்தல் காலத்தில் சும்மா இருக்கப்போவதில்லை. எனவேதான் இம்முறை வரப்போகும் (வருமா என்ற சந்தேகமும் சிலருக்கு இல்லாமலில்லை.) தேர்தல் முன்னைய தேர்தல்களிலும் பார்க்க பயங்கரமானதாயும், சிக்கல் நிறைந்ததாயும் உலகத்தின் கவனத்தை கவர்வதாயும் இருக்கும் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

கூட்டணிப் பிரமுகர்களின் அரசியல் மேதையும், ஜனாதிபதியின் விசேஷ நம்பிக்கைக்குப் பாத்திரமானவரும் 'தந்தைக்கு வாய்த்த மருமகனும் — கனடா தேசத்துப் பிரஜையுமான கலாநிதி ஜெயரட்ணம் வில்சன் அண்மையில் ஜனாதிபதிக்கு கூறிய ஆலோசனையில் தேர்தல் பிரசாரகாலம்நீடித்தால் பலாத்காரம் தோன்றக்கூடும் என்றும், திடீரென தேர்தலை நடத்திமுடிப்பதே சிறந்தது என்று அபிப்பிராயப்பட்டாராம்; அவரே அரசியல் யாப்பில் செய்யப்படவிருக்கும் திருத்தங்கள்பற்றியும் ஆலோசனைகள்வழங்கியதாகக் கூறப்படுகிறது. கூட்டணியினருக்கே அவரது நடவடிக்கைகள் சில இம்முறை கசப்பாக இருந்ததாக சொல்லப்படுகிறது. வில்சன், நீலன் முதலியோர் கூட்டணியை வழிநடத்துபவர்களே அல்லாது கூட்டணி எண்ணுவது போல அதன் ஆலோசகர்கள் அல்ல. அவர்கள் கூட்டணியின் எஜமானர்களின் சார்பிலே பணிபுரிபவர்கள், தானே எல்லாம் என்று கற்பனையுலகில் சஞ்சரிக்கும் தளபதி அமிர்தலிங்கத்தாருக்கு இது எங்கே புரியப் போகிறது?

அரசாங்கம் வெளிநாட்டு உள்நாட்டு ஆலோசகர்களின் அபிப்பிராயங்களைப் பெற்றுத் தனது சூழ்ச்சித் திட்டங்களை முறைப்படி நடாத்தி வருவது வெளிப்படையாகத் தெரிகிறது. ஒன்றுமாத்திரம் உறுதி. எல்லா எதிரணிகளையும் பிளவுபடுத்திப் பலவீனப்படுத்தவேண்டிய சந்தர்ப்பங்களில் பலாத்காரத்தையும் பயன்படுத்தி நாட்டை அடக்கியாள்வதே யூ.என்.பியின் நோக்கமாகும். கூட்டங்களைக் குழப்புதல் தொழிற்சங்க — ஆட்சேபனைக் கருத்தரங்குகளைக் குழப்புதல், சகலவிதமான ஜனநாயக எதிர்ப்புக்களையும் முறியடித்தல் என்பனவே யூ.என்.பியின் நடைமுறையாகும். இது சர்வாதிகாரப் போக்கின் வெளிப்பாடுகள் என்பதை மக்கள் ஏற்கனவே நன்றாக உணரத் தொடங்கி விட்டனர். ஆனால் இவ்வுணர்வைத் தக்கபடி ஒன்றுதிரட்டி செயல்படுத்த எதிரணிச் சக்திகள் எத்தனிக்காதது சற்றே அவதானிக்கக் கூடிய தாகும்.

★

## கருத்தும் கண்ணோட்டமும்

(ஜனமகன்)

# அமிரின் "மினி" சர்வாதிகாரம்?

வெளித் தோற்றத்திற்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லாததுபோல் 'மினி' சர்வாதிகாரி அமிர்தலிங்கம் உல்லாச பறவையாய் — சோடியாய் — உலகம் சுற்றும் வாலிடனாய் திரிந்தாலும் இப்பொழுது கூட்டணிக்குள் அதிகாரச் சண்டையும் குத்துவெட்டுகளும் அதிகரித்து வருவதாகவே அதன் ஆதரவாளர்கள் பேசிக்கொள்கின்றனர். 'அமிர்தலிங்கத்தின் தலைமையே பலருக்குப் பிரச்சினையாக இருக்கிறதாம். ஒரு குடும்பம் சமூகத்தின் தலைவிதியை நிர்ணயிக்க முடியுமா? வேண்டுமா? கட்சிக்கு அதிகாரமும் பொறுப்பும் இல்லையா என்று எம்.பி.க்களே முணு முணுக்கும் அளவுக்கு உள்பூசல்கள் முற்றிவருவதாக தெரிகிறது. நவம், தருமர், துரை, பண்டிதர் முதலிய 'பழைய தலைமுறையினர்'' தலைவரின் தனிநபர்வாதத்தையும், எடுத்தெறிந்துபேசும் போக்கையும், குடும்ப எதேச்சதிகாரத்தையும் வன்மையாக ஆட்சேபிப்பதாக அவர்களுடன் தொடர்பு கொண்டிருப்பவர்கள் கூறுகின்றனர்.

முற்போக்கு அரசியலைப் பற்றி ஓரளவேனும் அறிவுள்ளவர்களுக்கு இது ஆச்சரியத்தைக் கொடுக்காது. நாம் எப்பொழுதும் கூறிவந்திருப்பதைப்போல தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி தமிழர் வியாபார கூட்டணி முதலிய பாராளுமன்றவாத கட்சிகளெல்லாம் சமுதாய— பொருளாதார கொள்கைகளின் அடிப்படையில் அல்லாமல் பதவி, ஆசனம், அலவன்சு, உலக யாத்திரை, அதிகாரம் முதலியவற்றை அனுபவிக்க விரும்பும் சொகுசு வாழ்க்கைவிரும்பிகளான பத்தியகர்ச்ச நபர்களினால் ஆரம்பித்து நடத்தப்படுபவை. ஆகவே பதவிப்போட்டா போட்டிகளும், கழுத்தறுப்புகளும் காலைவாருதல்களும் நடக்கத்தானே செய்யும். இப்பொழுதுதான் தமிழ் மக்களிற் பலர் இந்த அவலநிலையை உணரத்தொடங்கியிருக்கின்றனர். 'தமிழ்த் தலைவர்கள் தமிழ்ப்பொது மக்களாலேயே தூக்கிஎறியப்படும் காலம் வெகுதூரத்திலில்லை.

ஆசிரியருக்கு கடிதம் :

## அந்தரங்க செயலாளரின் அடாத செயல் !

கடந்த 07-07-82ம் திகதியன்று மல்லாகம் உப அலுவலகத்தில் சோலைவரி நடுக்கட்டு உத்தியோகத்தராக கடமையாற்றும் ஊழியர் ஒருவர் மாவட்டசபைத் தலைவருடைய அந்தரங்கச் செயலாளரின் வீட்டிற்கு ''சே'' பத்திரம் விநியோகிக்கச் சென்றார். பத்திரத்தை பெற்றுக்கொண்ட அந்தரங்க செயலாளர் சோலைவரிப் பணத்தைக் கட்டுவதற்கு உடன்பட்டு பற்றுச்சீட்டு போடும்படி ஊழியரைக் கோரினார். அக்காணி முன்பு வேறொருவரிடமிருந்து பெற்றபடியால் தற்போதைய உரிமையாளரான செயலாளரின் பெயருக்கு மாற்றம் செய்யப்படவில்லை. எனவே பற்றுச்சீட்டு முன்பு காணிக்குச் சொந்தமானவரின் பெயரிலேயே எழுதிக் கொடுக்கப்பட்டது. இவர் முன்பு ஒரு சலவைத் தொழிலாளரிடமே இருந்து இக்காணி வாங்கியமை குறிப்பிடத் தக்கது. இதைப்பார்த்த அந்தரங்க செயலாளர் சலவை தொழிலாளியின் சாதியைச் சொல்லி தூஷண வார்த்தைகளால் ஏசி 'அவனிடம் வாங்கிய காணிக்குரிய சோலைவரிப் பணத்தை அவனிடமேபோய்க்கேள்' என ஊழியரின் சேட்டில் பிடித்து இழுத்து அவரைத் தாக்கி அனுப்பியதோடு மட்டுமல்லாமல், உப - அலுவலகத்தில் வேலைபார்க்கும் பொறுப்புள்ள ஊழியர்களையும் தூஷண வார்த்தைகளால் ஏசி அவர்களிடமும் போய் தன் வீரதீரச் செயலைக் கூறும்படி தாக்கி அனுப்பி இருக்கின்றார். பொறுப்பு வாய்ந்த மாவட்ட சபைத் தலைவரின் ஒரு அந்தரங்கச் செயலாளரின் வேலையா இது என்று இச்சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் அங்கலாய்க்கின்றனர். அடுத்த அந்தரங்கசெயலாளரின் இச்செயலை மாவட்டசபைத் தலைவர் அறிவாரா?

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள
சி. கந்தசாமி

# தேர்தல் சுதந்திரமாக நடக்குமா?

தேர்தல் ஆணையாளர் தனது உதவி கமிஷனர்களுக்கு வாய்மூலம் உத்தரவு பிறப்பித்திருப்பதாக தெரிய வருகிறது. திகதி அறிவிக்கப்பட்டு ஒருமாத காலத்திற்குள் தேர்தலை நடாத்துவதற்கு சகல ஆயத்தங்களையும் செய்யுமாறு அவர்களுக்கு அந்தரங்ககட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன. கச்சேரியிலிருந்து கல்விக்கந்தோர்வரை தேர்தல் வேலைகளில் கடமையாற்றக்கூடியவர்களின் பட்டியல்கள் தயாரிக்கும் வேலை தொடங்கிவிட்டதாக விஷயம் தெரிந்த வட்டாரங்கள் பேசிக் கொள்கின்றன. இது ஒருபுறமாக தேர்தல்சுதந்திரமாகவும் தலையீடு இன்றியும் நடைபெறுமா என்ற ஐயம் நாட்டின் நலனில் அக்கறை கொண்ட பல சிந்தனையாளரையும் சட்ட நிபுணர்களையும் யோசிக்கவைத்துள்ளது. செனட்டர் நடேசன்போன்றவர்கள் இதில் தீவிர கவனம் செலுத்துவது பலரும் அறிந்ததே. தென்கொரியா பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் முதலிய நாடுகளை முன்மாதிரியாகக் கூறிக்கொள்ளும் யூ.என் பி. கட்சியினரும், அரசும், அந்த நாடுகளில் சாதாரணமாக நடைபெறும் தேர்தல் தில்லுமுல்லுகளையும், மோசடிகளையும் இங்கும் 'தேச நலன் கருதி பின்பற்றுமோ என்பதே தேசபக்தர்களினதும், ஜனநாயகவாதிகளினதும் அச்சமாகும். சில வாரங்களுக்கு முன் இதுபற்றி கொழும்பில் நடந்த ஒரு கருத்தரங்கிற்கு ஏராளமான மக்கள் கூடியிருந்தது இவ்வச்சத்தின் தன்மையை உணர்த்துகிறது. ★

# அடுத்த ஜனாதிபதிக்கு இருக்கவேண்டிய தகைமைகள் என்ன?

அரசியல் அமைப்புச் சட்டத்திற்குப் பாரிய திருத்தங்களை அரசாங்கம் செய்வதன்மூலம் நான்கு வருட பதவிக் காலத்தை முடித்துக்கொண்ட ஜே. ஆர். எந்த நேரத்திலாவது தேர்தலை நடாத்தலாம்.

அண்மையில் ஜே. ஆர். தனது அரசாங்கத்தால் புகுத்தப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் மிக அற்புதமானதென்றும் அது ஓராயிரம் ஆண்டுகள் நிலைத்திருக்குமென்றும் பகிரங்கமாக பீத்தித் திரிந்தார். அது ஒரு அற்புதமான அரசியற் சட்டமென்றால் அதில் ஏன் அடிக்கடி குரங்குச் சேட்டைகளை செய்யவேண்டும். அரசியல் அமைப்பு சட்டத்திற்கமைய மக்களைப்பதப்படுத்தஜே.ஆர். முனைகிறாரே ஒழிய மக்களுக்காக ஒரு அரசியலமைப்பு இருப்பதை அவர் விரும்பவில்லை.

தனக்கு எதிர்ப்பு மலைபோல வளர்ந்துவருவதால் தான் பதவியில் தொடர்ந்திருக்க முடியாதென்பதை ஜே. ஆர்.உணர்ந்துள்ளார். தான் தொடர்ந்திருப்பதற்கு ஒரே வழிஅரசியலமைப்புச் சட்டத்தை சுரண்டிஎதிர்காலத்திற்கு யூ.என்.பி. திட்டமிட்டுள்ள சகல சனநாயக விரோதச் செயல்களுக்கும் சட்டம் என்ற போர்வை இடுவதே யாகும்.

ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடக்கூடிய மிகவும் சக்திமிகுந்த போட்டியாளரை அவர் ஏற்கனவே தடை செய்துவிட்டார். 140—150 இலட்சம் இலங்கை வாழ் மக்களில் ஒன்று இரண்டு இலட்சம் பேராவது தற்போதைய சட்டத்தின்படி இப்பதவிக்கு போட்டியிடலாமென்பது அவருக்குத் தெரிந்துவிட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டிக்கு நிற்க விரும்பும் ஒருவர் பின்வரும் தகைமைகளைக்கொண்டிருத்தல் வேண்டுமென்று விதிகளைவிதித்தால் திரு. ஜயவர்த்தன தொடர்ந்தும் அதிகாரத்திலிருப்பதை உத்தரவாதம் செய்து கொள்ளலாம்.

1) 75 வயதுக்கும் 80 வயதுக்குமிடைப் பட்டவராக இருத்தல் வேண்டும்.

2) றோயல் கல்லூரியின் பழைய மாணவராயிருத்தல் வேண்டும்.

3) திருமணமான ஆணுகவும் ஒரேயொரு ஆண் மகனுக்குத் தந்தையாகவும் இருத்தல்வேண்டும்.

4) மகன்விவாகரத்துசெய்து பின் இரண்டாம் தடவை மணம் முடித்தவராக இருத்தல் வேண்டும்,

5) அவரது உயரம்......அடி...... அங்குலமாயிருத்தல் வேண்டும். (ஜே. ஆர். ரின் உயரத்தைக் குறிப்பிடவும்)

6) அவரது நிறை......கிலோ (ஜே.ஆர். ரின் எடையை குறிப்பிடவும்)

7) அவருக்கு ......... பற்கள் இருத்தல் வேண்டும். (ஜே. ஆர்.ருக்கு இருக்கும் ஏதாவது பற்களின்எண்ணிக்கையைக் குறிப்பிடவும்)

8) முன்னைய சட்ட சபை அங்கத்தவராயிருந்திருத்தல் வேண்டும்.

9) குறிப்பிட்ட சட்டசபையில் களனித் தொகுதியின் பிரதிநிதியாயிருந்திருத்தல் வேண்டும்.

10) 1947; 1952ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல்களில் வெற்றிபெற்றவராகவும் 1956இல்போட்டியிட்டு தோல்விகண்டவராகவும் இருந்தல் வேண்டும்,

11) டட்லி சேனநாயக்காவின் மரணச் சடங்கின் போது உரையாற்றியவராகவும் டட்லியின் பூதவுடல் நிச்சயமாக அடக்கம் செய்யப்படும் என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டபின்னர் பின்வரும் கருத்துப்பட கூறியிருந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

'நல்ல கனவுகள்! இனிய இளவரசே சென்றுவாரும்'

12) இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் ஜனாதிபதியாக 1982 பெப்ரவரி 4ம் திகதிக்குப் பின் பதவிவகித்திருத்தல் வேண்டும்,

— நன்றி:

'றெட்பனர்'

★

# "புலி வேட்டை"

சென்னைச் சம்பவங்களையும், அதையொட்டிய யாழ்ப்பாணச் சம்பவங்களையும் நோக்கும்போது,தமிழீழ விடுதலை வன்முறை இயக்கங்களின் தலைமைகளின் தன்மைக்குப் பழைய ஜே.வி.பி. யின் தலைமையின் தன்மைக்கும் இடையிலான பொது இயல்புகள் பல புலனாகின்றன. அன்றைய ஜே.வி.பி. யின் விடயத்தில் கருத்து வேறுபட்டவர்கள் கட்சியினின்று விலகவும், விலக்கப்படவும் மட்டுமே நேர்ந்தது. தமிழீழ இயக்கத்தினர் இந்த உலகத்தினின்றே ஒருவர் மற்றொருவரை விலக்க முனைகின்றார்கள்.

தனிநபர் வாதம், அனுபவவேட்கை வாதம், கோஷ்டி வாதம், சதிவேலைகள் என்பன யாவுமே சிறுமுதலாளித்துவ இயக்கங்கட்கு உரியன. வெகுஜனங்களை சாராது அவர்களிடமிருந்து இரகசியமாக இயங்கும் நிலையும் தங்களுடன் பூரண உடன்பாடு அற்ற யாரையும் எதிரிகளாகவே கணிக்கும் மனோபாவமும் முற்போக்கு சக்திகட்கு உரியனவல்ல. பழைய ஜே. வி. பி. இன்றைய புதிய ஜே. வி. பி. ஆனது அதிசயமில்லை. விஜவீரவின் ஜே. வி. பி. க்கு யூ.என்.பி.ஐ விட ஸ்ரீலங்கா பெரிய எதிரி. அதேபோல் மாஜி ஜே.வி.பி.யினர் பெரிய எதிரிகள். 'தமிழீழவன்முறை இயக்கத்தினருக்கு யூ-என்.பி. அடக்குமுறையாளரை விடவும், யூ. என். பி. யின் நேச சக்தியான த.வி.கூ. தலைமையை விடவும் மோசமான எதிரிகள் பிற தமிழீழ விடுதலை வன்முறை இயக்கத்தினர்தான்.

ஜே. வி. பி. யின் எதிர்ப்புரட்சிகரத் தலைமையின் சிறுபிள்ளைத்தனமான செயல்களின் விளைவை நாடுகண்டது. சில ஆயிரம் வாலிபர்களது அநியாய மரணமும் பொலிஸ் - இராணுவ சக்திகளது வலிமையின் அதிகரிப்புமே ஜே.வி.பி.யின் சாதனை. ஜே. வி. பி. தலைமையைக் கண்டிக்கும் அதே சமயம் ஜே வி.பி. யினால் தவறாக வழிநடத்தப்பட்ட வாலிபர்களை உரிய அனுதாபத்துடனும், அவர்களது இலட்சிய வேட்கைக்குரிய மதிப்புடனும் நோக்கும் நாம் அவர்களது அரசியல் தெளிவீனம் காரணமாக அவர்கள் கண்ட அழிவையும் நாட்டின்முற்போக்கு சக்திகட்கு ஏற்படுத்திய நாசத்தையும் மறக்க முடியாது.

சிங்கள வாலிபர்களிடமிருந்து தமிழ் வாலிபர்கள் குறைந்தபட்சம் இதையாவது கற்க முடியாதா? அல்லது பட்டுத்தான் பாடம் பெறவேண்டுமென்பது நிரந்தரமான விதியா?

எதிர்வரும் ஆண்டுகளில் பொலிஸ் - இராணுவ அட்டூழியங்களும் அடக்கு முறைகளும் அதிகரிக்கும் வாய்ப்பே அதிகம். அதைவிடப் பொருளாதாரப் பிரச்சினைகளும் மேலும் உக்கிரமடையும். இத்தகைய சூழ்நிலைகள் ஒரு புறம்; இனத்துவேஷ, பாசிச சக்திகளை மேலும் தூண்டி விடுவதோடு விரக்தியுற்ற இளைஞர்களைத் தவறான பாதைகளில் தள்ளிச் செல்லவும் கூடும்.

சில தமிழ் வாலிபர்கள் ஒருவரை ஒருவர் அர்த்தம் அற்ற முறையில் அழிப்பதற்கும் பொதுமக்களது நலன்கட்கு விரோதமான முறையில் செயற்படுவதற்கும் காரணமான சகல சக்திகளும் கண்டனத்துக்குரியன.

வெகு ஜனங்களின்மீது நம்பிக்கையில்லாமல் வெகு ஜன ஆதரவில்லாமல் மேற்கொள்ளப்படும் இரகசியப் போராட்டங்களும் — பயங்கரவாதமும் — படுகொலைகளும் சம்பந்தப்பட்ட நபர்களை மேலும் மேலும் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தவே செய்யும்.

அண்மைய சம்பவங்கள் த. வி. கூ. தலைமையின் தன்மையை இன்று அம்பலமாக்கிவிட்டன. தமிழீழ விடுதலை அணியின் முதலாளித்துவத் தலைமை அம்பலமாக இன்னும் காலம் எடுக்கலாம். ஆனால் இலங்கையின் ஒடுக்கப்பட்ட மக்களது ஐக்கியத்துக்கும் ஒன்றுபட்ட போராட்டத்துக்கும் விரோதமான சகல சக்திகளையும்பற்றித் தமிழ்மக்கள் புனராலோசனை செய்ய இது உரிய நேரமல்லவா?

★

# ஈழம் மேட் இன் அமெரிக்கா

ஊர்க்கோட்டுப் படியேறி, சுப்ரீம் கோட்டேறிப் பிறிவுக்கவுன்சில் தீர்வுதேடும் சுத்தத் தமிழ்ப் பரம்பரைத் தலைவர்கள் இப்போது தமிழ் ஈழத் தந்தையின் மைந்தனுக்கா, தம்பியின் அண்ணனுக்கா என்று வாதாட அமெரிக்கத் தமிழீழத் தமஷா மாநாட்டுக்குப் போய் வந்துள்ளனர். எதிர்பார்த்தது போலவே வழக்குத் தள்ளிப்போடப்பட்டு விட்டது. ஆகவே த.வி.கூ.யும், த.ஈ.வி.அணியும்வெற்றி தத்தமக்கே என்று கூத்தாடலாம். இவர்களுக்கு இங்கே உள்ள மக்களின் அங்கீகாரத்தைவிட அமெரிக்காவிலும், இங்கிலாந்திலுமுள்ள கனவான்களின் அங்கீகாரந்தானே முக்கியமான விடயம். 'தமிழீழம்' என்ற விளையாட்டுப் பொருளுக்கு 'மேட் இன் அமெரிக்கா' என்றால் தானே மவிசு?

★

# அரசனும் துறவியும்

முன்பு அதிகம்பேர் அறியாத ஒரு துறவிக்கு இன்று பிரபல்யம் கிடைத்துவிட்டது. அவர் அப்படி என்ன பிரமிக்கத் தக்க விடயத்தை செய்துவிட்டார்? ஜனாதிபதி ஜே. ஆரைத் துரோகி என்று அழைத்துவிட்டார்? அதைக்கூட யாரும் பெரிதாக எடுக்கவில்லை. ஆனால் ஜனாதிபதியால் அதை சகிக்க முடியவில்லை. உடனே பதில் மிரட்டல்கள், சத்தியாக்கிரகம், கோவில் உடைமைகளின் சுவீகாரம் என்று கடுகளவு விஷயம் மலையளவு வளர்ந்துவிட்டது. இலங்கையை அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு அடகு வைத்ததற்காக இலங்கையின் பொருளாதாரத்தை சீர்குலைத்ததற்காக மக்களின் ஜனநாயக உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்துவருவதற்காக அந்தத் துறவி துரோகி என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தால் அது ஒரு விஷயம் தான். அப்படியல்லாது ஒரு இனவாதி இன்னொரு இனவாதியைப் பார்த்து 'நீ இனத்துரோகி' என அழைப்பதைப் பார்த்து நாம் என்ன சொல்ல இருக்கிறது? ஜே. ஆர். இந்த ஒரு வார்த்தைக்கு இந்தளவு தூரம் நடுங்குவது கொஞ்சம் அதிசயமாகத்தான் இருக்கிறது. எதிர்க்கட்சிகளை இனவாதப் பிக்குவுடன் அடையாளம் காட்டி சிறுபான்மையினரின் ஆதரவைப் பெறும் யோசனையாகவும் இருக்கலாம்.

★

**சம்பவங்களும் அதன் போக்குகளும்**

**அவதானி**

# கடமை கண்ணியம் கட்டுப்பாடு

தி. மு. க. கோஷங்களை இரவல் வாங்குவதில் தமிழரசுக்கட்சியின் வாரிசுகள் யாருக்கும் சளைத்தவர்களல்ல. தம்பிக்கு மடல் எழுதுவதென்றாலும் அடலேறு, அண்ணா, தம்பி என்றெல்லாம் அழைப்பதிலும் இவர்கள் நன்றாகப்பயிற்சி பெற்றுவிட்டார்கள். அங்கே சென்னை ஆட்சி மன்றத்தில் அ.தி.மு.க.வின் இரத்தத்தின் இரத்தங்களும் தி. மு. க. வின் உடன் பிறப்புக்களும் இப்போது தங்கள் பேச்சு, நடைமுறைகள்மூலம் சாராயக் கடைகளின் தரத்தையே உயர்த்திவிட்டார்கள். இங்கே உள்ளவர்கள் சளைக்கலாமா? அமிர்தலிங்கம் தன் பேச்சுகளில் கோவை மகேசன் ஈழவேந்தன் இருவர் மீதும் தனிப்பட்ட தாக்குதல்களைத் தொடுத்ததும், இவர்கள் (குற்றச்சாட்டுகளை மெல்ல ஒதுக்கிவிட்டு) பதிலுக்கு அமிர்தலிங்கம் குற்றச்சாட்டுகளை சுமத்திய அர்ப்பத்தனத்தைச் சாடியதும், அமிர்தலிங்கத்தின் பழைய பேச்சுக்களை 'சுதந்திரனில்' பிரசுரிப்பதும் விசிறிகளுக்கு எடுபடவில்லை, 'அடே ராஸ்கல்' 'அயோக்கியப் பயலே' என்ற மாதிரிக் கண்ணியமாகத் திட்ட முடியாவிட்டாலும் கூடக் கருணாநிதியின் சினிமா வசனங்களையாவது இவர்கள் இரவல் வாங்கித் 'திரும்பிப்பார், தீயவனே திரும்பிப்பார்' 'அடே பூசாரி, முதலில் உன் ஜாதகத்தைக் கணித்துக்கொள்' என்கிற மாதிரிப்பேசினால் நாலு சினிமாப் படங்களைப் பார்த்த திருப்தியாவது ஏற்படும்.

★

# நடைமுறை பற்றி

## தத்துவம் கற்போம்

மாஓசேதுங்

பாட்டாளி வர்க்க அரசியல் நடைமுறை வாழ்வுக்கு தத்துவம் மிக அவசியமாகும். இத்தேவையை உணர்ந்து செம்பதாகை தொடர்ச்சியாக தத்துவார்த்தக் கட்டுரைகளை வெளியிட முடிவுசெய்துளது. அதன் ஆரம்பமாக தோழர் மாஓவின் நடைமுறைபற்றிய கட்டுரையின் ஒரு பகுதியை வெளியிடுகிறது. அடுத்த பகுதிகள் தொடர்ந்தும் செம்பதாகையில் வெளிவரும்.

— ஆசிரியர் குழு

மாக்ஸ்க்கு முற்பட்ட பொருள்முதல்வாதம், அறிவு என்ற விஷயத்தை மனிதனின் சமுதாய இயல்புக்குப் புறம்பானதாக, அவனுடைய சரித்திரரீதியான வளர்ச்சிக்கு அப்பாற்பட்டதாக ஆராய்ந்தது. எனவே அறிவு சமுதாய நடைமுறையைப் பொறுத்திருக்கின்றது என்பதை அதாவது பொருள் உற்பத்தியையும் வர்க்கப் போராட்டத்தையும் பொறுத்திருக்கின்றது என்பதை மாக்ஸ்சுக்கு முற்பட்ட பொருள்முதல்வாதம் புரிந்துகொள்ளமுடியவில்லை.

முதன்முதலாக மனிதன் பொருளுற்பத்தி செய்யும் நடவடிக்கையே மிகவும் அடிப்படையான நடைமுறைச்செயல் என்றும், இதர செயல்கள் அனைத்தையும் அதுவே நிர்ணயிக்கின்றதென்றும் மாக்சிசவாதிகள் கருதுகிறார்கள். மனிதனின் அறிவு பிரதானமாகப் பொருளுற்பத்தி நடவடிக்கையைப் பொறுத்திருக்கிறது. அதன்மூலம் அவன் படிப்படியாக இயற்கையின் நிகழ்ச்சிகளை, இயற்கையின் குணாதிசயங்களை இயற்கையின் விதிகளை, அவனுக்கும் இயற்கைக்குமுள்ள உறவுகளை அறிந்துகொள்கின்றான்; பொருளுற்பத்தியின் நடவடிக்கையின்மூலமாகவே அவன் மனிதர்மத்தியிலிருக்கும் குறிப்பிட்ட உறவுகளைப்பற்றியும், வெவ்வேறு அளவுகளில் படிப்படியாக அறிவு பெறுகிறான். இந்த அறிவில் எந்த அம்சத்தையும் பொருளுற்பத்தி நடவடிக்கைக்கு அப்பாற்பட்ட முறையில் பெறமுடியாது. வர்க்கபேதமில்லாத ஒரு சமுதாயத்தில், சமுதாயத்தின் உறுப்பினர் என்ற முறையில் ஒவ்வொரு நபரும் இதர உறுப்பினர்களுடன் கூட்டு முயற்சியில் ஈடுபடுகிறார்; அவர்களுடன் குறிப்பிட்ட பொருளுற்பத்தி உறவுகளைக் கொண்டு, பௌதிகவாழ்க்கையின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகப் பொருளுற்பத்தி செய்கிறார். பல்வகைப்பட்ட வர்க்க சமுதாயங்களில் சமுதாயத்தின் சகல வர்க்க உறுப்பினர்களும், பல்வேறு விதங்களில், குறிப்பிட்ட பொருளுற்பத்தி உறவுகளைக்கொண்டு பௌதிக வாழ்வுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக பொருளுற்பத்தி செய்கின்றார்கள். இதுவே மனித அறிவு வளர்வதற்கு முதன்மையான ஊற்றுமூலமாகும்.

மனிதனின் சமுதாய நடைமுறை என்பது பொருளுற்பத்தி நடவடிக்கையில் மட்டும் அடங்கிவிடவில்லை; வர்க்கப் போராட்டம், அரசியல் வாழ்வு, விஞ்ஞான நடவடிக்கை போன்று வேறு பல செயல் வகைகளையும் கொண்டுளது. சுருங்கச் சொன்னால் சமுதாயத்திலுள்ள மனிதன் சமுதாய நடைமுறை வாழ்வின் சகல துறைகளிலும் பங்கெடுக்கிறான். ஆகவே, அவன் அறிவு பெறும் பொழுது பௌதிக வாழ்வின் மூலம் விஷயங்களை தெரிந்து கொள்வதுடன் அரசியல் வாழ்வு, கலாச்சார வாழ்வு (இவை இரண்டு பௌதிக வாழ்வுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவை) ஆகியவற்றின்மூலமாக மனிதர் மத்தியிலிருக்கும் பல்வகை உறவுகளைப் பல்வேறு அளவுகளில் அறிந்துகொள்கிறான். இவற்றில் பல்வேறு வடிவங்களில் நடைபெறும் வர்க்கப் போராட்டம், மனித அறிவின் வளர்ச்சியில் விசேஷமான பாத்திரம் வகிக்கிறது. வர்க்க சமுதாயத்தில் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் உறுப்பினராகவே வாழ்கின்றார்; ஒவ்வொரு சிந்தனையிலும் விதிவிலக்கு இன்றி ஒரு வர்க்கத்தின் முத்திரை குத்தப்பட்டிருக்கின்றது.

மனித சமூகத்தில் பொருளுற்பத்தி நடவடிக்கை தாழ்ந்தமட்டத்திலிருந்து உயர்ந்த மட்டத்திற்குப் படிப்படியாக வளர்ச்சியடைகின்றது; எனவே இயற்கை சம்பந்தமாகவோ சமுதாயம் சம்பந்தமாகவோ மனிதனின் அறிவும் தாழ்ந்த மட்டத்தில் இருந்து உயர்ந்த மட்டத்திற்கு அதாவது மேலோட்டமாக இருப்பதிலிருந்து ஆழமானதாகவும், ஒருகோணப் பார்வையாக இருப்பதில் இருந்து பல அம்சங்களைப் புரிந்துகொள்வதாகவும் வளர்கிறதென்று மாக்சிசவாதிகள் கருதுகிறார்கள். வரலாற்றில் மனிதன் மிக நீண்டகாலமாகச் சமுதாய வரலாற்றைப் பற்றிய ஒருதலைப்பட்சமான ஞானத்திற்கே உட்பட்டிருந்தான்; ஏனென்றால் ஒரு புறத்தில் சுரண்டல் வர்க்கங்களின் ஒருதலைப்பட்சமான கருத்துக்கள் சமுதாய வரலாற்றை இடைவிடாமல் திரித்துமாறுபடுத்தின; மறுபுறத்தில், சிறு அளவுற்பத்தி முறை மனிதனின் கண்ணோட்டத்தைக் குறுக்கிக்கட்டுப்படுத்தியது. நவீனப்பாட்டாளி வர்க்கம் பெரிய உற்பத்தி சக்திகளுடன் - பெருந்தொழில்களுடன் தோன்றிய பொழுதுதான் மனிதன் சமுதாய வரலாற்றின் வளர்ச்சியைப்பற்றிச் சகல அம்சங்களையும் தழுவிய சரித்திரரீதியான விளக்கத்தைப்பெற முடிந்தது; தன் சமுதாய அறிவை ஒரு விஞ்ஞானமாக மார்க்சிச விஞ்ஞானமாக மாற்ற முடிந்தது.

மனிதனின் சமுதாய நடைமுறைமட்டுமே, புற உலகத்தைப்பற்றி அவன் அடைந்திருக்கும் அறிவின் உண்மைக்கு அளவுகோலாக இருக்க முடியுமென்று மாக்சியவாதிகள் கருதுகிறார்கள். மெய்யாகப் பார்த்தால் சமுதாய நடைமுறை நிகழ்ச்சியில் (பொருளுற்பத்தி, வர்க்கப் போராட்டம், விஞ்ஞான பரிசோதனை ஆகிய நிகழ்ச்சிகளில்) மனிதன் எதிர்பார்த்த பலன்களை அடையும் பொழுதே, அவனுடைய அறிவு ருசுவாகிறது. ஒருவன் தனது வேலையில் வெற்றியடைய விரும்பினால் அதாவது, எதிர்பார்த்த விளைவுகளைப் பெறவிரும்பினால், தனது கருத்துக்களைப் புறநிலை உலகத்தின் விதிகளுடன் இசைவுடையவை ஆகச் செய்ய வேண்டும். அவை இசைவாகாவிட்டால் அவன் தனது அனுஷ்டானத்தில் தோல்வியடைவான். தோல்வியடைந்த பின், அவன் தோல்வியில் இருந்து படிப்பினைகளைப் பெற்று, புறநிலை உலகத்தின் விதிகளுக்கு இசைவாகத் தனது கருத்துக்களைத் திருத்தி தோல்வியை வெற்றியாக மாற்றமுடியும். ''தோல்வியென்பது வெற்றியின் தாய்'' 'இடறி விழுதல் அறிவில் எழுதல்'' என்பதன் அர்த்தம் இதுவேயாகும். அறிவு சம்பந்தமான இயங்கியல் பொருள்முதல்வாதம் நடைமுறையை முதலிடத்துக்கு உயர்த்துகின்றது; மனித அறிவை நடைமுறையிலிருந்து கொஞ்சமும் பிரிக்க முடியாதென்று கருதுகிறது; நடைமுறையின் முக்கியத்துவத்தை மறுக்கும் தவறான தத்துவங்கள் அனைத்தையும், நடைமுறையிலிருந்து அறிவைப் பிரித்துவிடும் பிசகான தத்துவங்கள் அனைத்தையும் நிராகரிக்கின்றது. எனவே ''நடைமுறை(தத்துவார்த்த) அறிவைவிட உயர்ந்தது; ஏனெனில் அது சர்வவியாபகத்தன்மை கொண்டிருப்பதுடன் கண்கூடான உண்மையாகவுமிருக்கின்றது'1 என்று லெனின் கூறினார். இயங்கியல்-பொருள்முதல்வாதம்பற்றிய மார்க்சிச தத்துவத்துக்கு இரண்டு சிறப்பியல்புகள் உண்டு. ஒன்று அதன் வர்க்க இயல்பு. இயங்கியல் — பொருள் முதல்வாதம் என்பது பாட்டாளி வர்க்கத்துக்குச் சேவை செய்வது என்று அது வெளிப்படையாகப் பிரகடனம் செய்கின்றது. மற்றது அதன் அனுஷ்டான சாத்தியப்பாடு. தத்துவம் அனுஷ்டானத்தில் தங்கியிருப்பதை அது வலியுறுத்துகின்றது. தத்துவம் அனுஷ்டானத்தை அடிப்படையாகக் கொண்டது. மீண்டும் அனுஷ்டானத்துக்கே சேவைசெய்கின்றது என்று வலியுறுத்துகின்றது: ஒருவருடைய அறிவு அல்லது தத்துவத்தின் உண்மை அக உணர்ச்சிகளால் நிர்ணயிக்கப்படுவதில்லை. சமுதாய நடைமுறையில் அதனால் ஏற்படும் புறநிலையான விளைவாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. சமுதாய நடைமுறைமட்டுமே உண்மைக்கு உரைகல்லாயிருக்க முடியும். அறிவுசம்பந்தமான இயங்கியல் — பொருள்முதல்வாதத் தத்துவத்தின் முதன்மையான, அடிப்படையான கருத்தோட்டமாயிருப்பது நடைமுறை சம்பந்தமான அதன் கருத்தோட்டமேயாகும் 2.

ஆனால் மனித அறிவு நடைமுறையிலிருந்து எழுந்து நடைமுறைக்குத் தொண்டாற்றுவதென்பதுதான் எப்படி? அறிவு வளர்ச்சி எப்படி நிகழ்கிறதென்பதைப் பார்த்தால் இது தெளிவாகும்.

நடைமுறை நிகழ்ச்சியில், மனிதன் முதன்முதலில் பல்வேறு விஷயங்களின் நிகழ்ச்சிகளை, அந்த விஷயங்களின் தனித்தனி அம்சங்களை, அந்த விஷயங்களின் புற உறவுகளை மட்டும்தான் பார்க்கின்றான். உதாரணமாக, யென் ஆனைப் பார்த்துச் செல்வதற்காக சிலர் வெளியிலிருந்து வருகிறார்கள். முதல் நாள் அல்லது முதல் இரண்டு நாட்கள் அவர்கள் யென் ஆனின் தரையமைப்பையும், வீதிகளையும், வீடுகளையும் பார்த்துத் தெரிந்துகொள்கிறார்கள்; பல ஜனங்களைச் சந்தித்து விருந்துகள், மாலை நேர வரவேற்புகள், வெகுஜனக் கூட்டங்கள் ஆகியவற்றில் கலந்து கொள்கிறார்கள்; பல்வகைப்பட்ட உரையாடல்களைச் செவிமடுக்கிறார்கள்; பல தஸ்தாவேஜுகளை படிக்கிறார்கள். இவையெல்லாம் பல விஷய நிகழ்ச்சிகளாகவும் அந்த விஷயங்களின் தனித்தனி அம்சங்களாகவும் அந்த விஷயங்களுக்கிடையேயுள்ள புறஉறவுகளாகவும் இருக்கின்றன. இது புலன் அறிவுக்கட்டம் எனப்படுகிறது. புலன்களுக்குப் புலப்பட்டதை மனதில் பதியச் செய்துகொள்ளும் கட்டம் இது. அதாவது, யென் ஆனிலுள்ள பல தனித்தனி விடயங்கள் பார்வையாளர் கோஷ்டியினரின் ஞானேந்திரியங்களைப் பாதிக்கின்றன; அவர்களுக்குப் பலவற்றைப் புலப்படுத்துகின்றன; அவர்களுடைய மனதில் புலப்பட்டவற்றின் நினைவுகள் பதிகின்றன; இவ்வாறு கிரகிக்கப்பட்டவைகளுக் கிடையேயுள்ள பொதுப்படையான புற உறவுகளைப்பற்றியும் அவர்களுக்கு ஒரு கருத்து ஏற்படுகின்றது; இது அறிவின் முதல்கட்டமாகும். இந்தக் கட்டத்தில், ஆழ்ந்த கருத்துக்களை உருவாக்கிக் கொள்ளவோ தர்க்க சாஸ்திரத்துக்கு உகந்த முறையில் முடிவுகளுக்கு வரவோ மனிதனால் முடியாது.

சமுதாய நடைமுறை நீடிக்கும்பொழுது, நடைமுறையின் போக்கில் மனிதனுக்குப் புலனறிவையும் மனப்பதிவையும் ஏற்படுத்தியவிடயங்கள் மீண்டும்மீண்டும் பல தடவை நிகழ்கின்றன; பிறகு மனிதனின் மனதில் நிகழும் அறிவு வளர்ச்சியில் ஒரு திடீர் மாற்றம் (ஒரு பாய்ச்சல்) சம்பவிக்கின்றது; கருத்துக்கள் உண்டாகின்றன. கருத்துக்கள் என்பவை விஷயங்களின் நிகழ்ச்சிகளோ, அவற்றில் தனித்தனி அம்சங்களையோ அவற்றின புற உறவுகளையோ பிரதிபலிப்பதில்லை; அந்த விடயங்களின சாராம்சத்தை ஒட்டுமொத்தத் தன்மையை, அவற்றின் உள்ளுறவுகளை அந்தக் கருத்துக்கள் கிரகித்துக் கொளகின்றன. கருத்தும் புலப்பாடும் அளவில் மட்டுமல்ல, தன்மையிலும் வேறுபட்டிருக்கின்றன. மேற்கொண்டு முன்னேறி மதிப்பிடுவதும் ஊகித்துணர்வதுமான முறையைக் கடைப்பிடித்தால், தர்க்க சாஸ்திரத்துக்கு ஒத்த முடிவுகளுக்கு நாம் வரமுடியும். ''புருவத்தை நெரித்தால் புதிய உபாயம் தென்படும்'' என்று 'மூன்று ராஜ்யங்களின்கதை'யில் கூறப்படுவதும் 'யோசித்துச் சொல்கிறேன்' என்று அன்றாடப் பாஷையில் நாம் கூறுவதும் மதிப்பிடுவதற்காகவும் ஊகித்துணர்வதற்காகவும் மனிதன் தன் மனதில் கருத்துக்களை உபயோகித்துக் கொள்வதையே குறிப்பிடுகின்றன. இது அறிவின் இரண்டாவது கட்டம். வெளியிலிருந்து வந்த பார்வையாளர் கோஷ்டியினர் பல்வேறு தகவல்களைச் சேகரித்துக் கொண்டு, ''அவற்றை சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்த பின் 'ஜப்பானிய -எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணி சம்பந்தமான கம்யூனிஸ்ட் கட்சிக் கொள்கை முற்று முழுதானது, நேர்மையானது, அந்தரங்க சுத்தியானது'' என்று தீர்மானிக்க முடியும். இந்தத் தீர்மானத்துக்கு வந்தபின் அவர்கள் தேச விமோசனத்துக்கான ஒற்றுமையில் அந்தரங்க சுத்தியுடையவர்களாயிருந்தால், மேலும் ஒரு படி முன்னேறி, 'ஜப்பானிய-எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணி வெற்றிபெற முடியும்' என்ற முடிவுக்கு அவர்கள் வர முடியும். ஒரு விடயத்தைப்பற்றி அறிந்துகொள்ளும் முழுப்போக்கிலும் கருத்தை உருவாக்குவதும், மதிப்பிடுவதும் ஊகித்துணர்வதுமான கட்டமே அதிக முக்கியமான கட்டம்; அதைப் பகுத்தறிவுக் கட்டம் என்று கூறுகிறோம். அறிவு பெறுவதன் உண்மையான வேலை என்னவெனில் புலன் அறிவு மூலம் சிந்தனையைத் தூண்டி, புறப் பொருட்களின் உள் முரண்பாடுகளைப் பற்றியும், அந்தப்பொருட்களின் விதிகளைப்பற்றியும், ஒரு நிகழ்ச்சிக்கும் மற்றொன்றுக்குமிடையிலான உள் உறவுகளைப்பற்றியும் படிப்படியாக ஞானம் பெறுவதாகும்; அதாவது தர்க்கரீதியான அறிவைபெறுவதாகும். மீண்டும் சொல்வதென்றால், தர்க்கரீதியான அறிவு, புலப்படும் அறிவிலிருந்து எப்படி மாறுபட்டிருக்கின்றதென்றால் புலன் அறிவு விஷயங்களின் தனித்தனி அம்சங்கள், நிகழ்ச்சிகள் புற உறவுகள் ஆகியவற்றை பற்றியதாகும். தர்க்கரீதியான அறிவோ விஷயங்களின் முழுமை, சாராம்சம், உள்ளுறவுகள் ஆகியவற்றை

(5ம் பக்கம் பார்க்க)

# மனிதனின் சரியான கருத்துகள் எங்கிருந்து வருகின்றன?

● மாஓ சேதுங்

**மனிதனின் சரியான கருத்துகள் எங்கிருந்து வருகின்றன? அவை வானத்திலிருந்து விழுகின்றனவா? இல்லை; மூளையில் இயல்பாக உள்ளனவா? இல்லை. அவை சமுதாய அனுஷ்டானத்திலிருந்து மட்டுமே தோன்றுகின்றன; உற்பத்தி போராட்டம், வர்க்கப் போராட்டம், விஞ்ஞானப் பரிசோதனை என்ற மூவகைச் சமுதாய அனுஷ்டானங்களிலிருந்துவருகின்றன. மனிதனின் சமுதாய வாழ்வே அவனுடைய சிந்தனையை நிர்ணயிக்கின்றது. முன்னேறிய வர்க்கத்தின் குணும்சமாக விளங்கும் சரியான கருத்துக்கள் ஒருகால் பொதுமக்களால் கிரகித்துக் கொள்ளப்பட்டதும், இக்கருத்துகள் சமுதாயத்தை மாற்றுகின்ற உலகை மாற்றுகின்ற ஒரு பொருளாயத சக்தியாகவடிவெடுக்கின்றன. மக்கள் தமது சமுதாயஅனுஷ்டானத்தில், பல்வேறு வகையான போராட்டங்களிலும் ஈடுபட்டு, தமது வெற்றிகள் தோல்விகள் இரண்டிலும் இருந்து செழுமையான அனுபவத்தைப் பெறுகின்றனர். புறநிலை உலகத்தின் எண்ணற்ற தோற்றப்பாடுகள் மனிதனின் மெய், வாய், கண், மூக்கு, செவி, ஆகிய பஞ்ச புலன்களுக்கும் ஊடாக, அவனுடைய மூளையில் பிரதிபலிக்கின்றன. ஆரம்பத்தில் அறிவு புலக்காட்சியாக இருக்கின்றது: போதிய அளவு புலக்காட்சி அறிவு தொகுக்கப்பட்டதும், அதில் ஒரு பாய்ச்சல் நிகழ்ந்து அது பகுத்தறிவாக மாறுகின்றது. அதுவே கருத்துகள் என்று அழைக்கப்படுகின்றது. இது அறிகையின் ஒரு வளர்ச்சிப் போக்கு.**

இது அறிகையின் முழுவளர்ச்சிப்போக்கில் முதலாவது கட்டம், அதாவது புறநிலைச் சடப் பொருளிலிருந்து அகநிலை உணர்வுக்குச் செல்லுகின்ற வாழ்விலிருந்து கருத்துகளுக்குச் செல்லுகின்ற கட்டம் ஆகும். (தத்துவங்கள், கொள்கைகள், திட்டங்கள், அல்லது வழிமுறைகள் உட்பட) ஒருவரின் உணர்வு அல்லது கருத்துகள் எல்லாம் புறநிலை யதார்த்த உலகைச் சரிவரப் பிரதிபலிக்கின்றனவா, இல்லையா என்பது இந்தக் கட்டத்தில் இன்னும் நிரூபிக்கப்படவில்லை. இக் கட்டத்தில் அவை சரியானவையா இல்லையா என்று நிச்சயிப்பதும் சாத்தியமாகாது. பின்னர் அறிகை வளர்ச்சிப்போக்கின் இரண்டாவது கட்டம், அதாவது உணர்விலிருந்து மீண்டும் சடப்பொருளுக்கு, கருத்துகளிலிருந்து மீண்டும் வாழ்வுக்கு செல்லும்கட்டம் வருகின்றது. இந்தக் கட்டத்தில் தத்துவங்கள், கொள்கைகள் திட்டங்கள் அல்லது வழிமுறைகள் எல்லாம் எதிர்பார்த்த வெற்றியைத் தருகின்றனவா என்பதை நிச்சயிக்க முதல் கட்டத்தில் சம்பாதிக்கப்பட்ட அறிவு சமுதாய அனுஷ்டானத்தில் பிரயோகிக்கப்படுகின்றது. பொதுவாகச், சொன்னுல் எவை வெற்றி பெறுகின்றனவோ அவை சரியானவை; எவை தோல்வியடைகின்றனவோ அவை பிசகானவை; விசேஷமாக இயற்கையுடன் மனிதன் நடத்தும் போராட்டத்தில் இது உண்மையாகும். சமுதாய போராட்டத்தில் முன்னேறிய வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சக்திகள் சில சமயங்களில் தோல்வியடைகின்றன; காரணம் அவர்களுடைய கருத்துகள் தவருனவை என்பதல்ல; பதிலுக்கு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சக்திகளின் சமநிலையில் தற்காலிகமாக முற்போக்கு சக்திகள் பிற்போக்கு சக்திகளைப்போல் அவ்வளவு பலம்பெற்றிருக்கவில்லை; எனவே அவை தற்காலிகமாகத் தோல்வி அடைகின்றன: ஆனுல் இன்றே, நாளையோ அவை வாகைசூடுவது நிச்சயம். அடுத்து அனுஷ்டானப் பரீட்சைமூலம் மனிதனுடைய அறிவில் இன்னொரு பாய்ச்சல் நிகழ்கின்றது. இந்தப் பாய்ச்சல் முன்னைய பாய்ச்சலிலும்பார்க்க முக்கியமானது. காரணம், முதலாவது பாய்ச்சலில் அதாவது, புறநிலை யதார்த்த உலகைப் பிரதிபலிக்கும்போக்கில் வகுக்கப்பட்ட கருத்துகள், தத்துவங்கள், கொள்கைகள், திட்டங்கள் அல்லது வழிமுறைகள் ஆகியவற்றின் சரிபிழையை இந்தப்பாய்ச்சல் மட்டும் நிரூபிக்கமுடியும். இவை தவிர உண்மையைப் பரீட்சிக்கும் வழி வேறு கிடையாது. பாட்டாளி வர்க்கம் உலகத்தை அறிந்து கொள்வதற்கான ஒரே நோக்கம், அதை மாற்றுவதேயாகும். சடப்பொருளிலிருந்து உணர்வுக்கும், பின்னர் உணர்விலிருந்து சடப்பொருளுக்கும், அதாவது அனுஷ்டானத்திலிருந்து அறிவுக்கும் பின்னர் அறிவிலிருந்து அனுஷ்டானத்துக்கும் செல்லும் போக்கு திரும்பத் திரும்பப் பல தடவை நிகழ்ந்த பின்னர் மாத்திரமே ஒரு சரியான அறிவுக்கு வரக்கூடிய நிலை ஏற்படுவது வழக்கம். இத்தகையதுதான் அறிவு பற்றிய மாக்சிசத் தத்துவம், அறிவு பற்றிய இயங்கியல்-பொருள் முதல்வாத தத்துவம். இப்பொழுது நமது தோழர்களில் பலர் இந்த அறிவுபற்றிய தத்துவத்தை இன்னும் புரிந்துகொள்ளவில்லை. அவர்களுடைய சிந்தனை, அபிப்பிராயம், கொள்கை, வழிமுறை திட்டம், முடிவுரை நாவன்மை மிக்கசொற்பொழிவு நீளமான கட்டுரை ஆகியவை எங்கிருந்து வருகின்றன என்பதைக் கேட்டால் அவர்கள் இந்தக் கேள்வியை விசித்திரமானதாகக் கருதுவதோடு பதிலளிக்க முடியாமலும் இருக்கிறார்கள். சடப் பொருள் உணர்வு நிலைக்கும் உணர்வு நிலை சடப்பொருளுக்கும் மாற்றப்பட முடியும் என்ற நாளாந்த வாழ்வு நிகழ்ச்சிகளாகிய பாய்ச்சல்நிலைமையையும்கூட அவர்கள் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். ஆகையால் தமது சிந்தனையை சரியாக்கி பரிசீலனைசெய்து படிப்பதிலும் அனுபவங்களைத் தொகுப்பதிலும் தேர்ச்சிபெற்று, கஷ்டங்களைக் கடந்து தவறுகளைக் குறைத்து வேலையை நன்கு செய்துஇயன்றளவு போராடி ஒரு மகத்தானபலம் வாய்ந்த சோஸலிச நாட்டைக் கட்டியமைக்கவும் உலகிலுள்ள பரந்துபட்ட அடக்கி ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்ட மக்களுக்கு உதவிசெய்து, நாம் தோள்கொடுக்க வேண்டிய மாபெரும் சர்வதேசிய கடமையை நிறைவேற்றவும், எமது தோழர்களுக்கு அறிவு பற்றிய இயங்கியல்-பொருள் முதல்வாதத் தத்துவப் போதனையை அளிக்கவேண்டும்.

# நடைமுறை பற்றி

4-ம் பக்கத் தொடர்ச்சி......

அறிவதற்காகப் பெருந்தூரம் முன்னேறுகிறது; சுற்றியுள்ள உலகத்தின் உள் முரண்பாடுகளை விண்டு காட்டுகிறது. எனவே, சுற்றியுள்ள உலகம் முழுமையாக அதன் சகல அம்சங்களுக்குளும் இடையே உள்ள உள் உறவுகளுடனே எவ்வாறு வளர்ச்சியடைகிறது என்பதை தர்க்க அறிவு கிரகிக்கக்கூடியதாயிருக்கின்றது.

அறிவு வளரும் நிகழ்ச்சி சம்பந்தமான இத்தகைய இயங்கியல் - பொருள்முதல் வாதத் தத்துவத்தை, நடைமுறையை அடிப்படையாகக் கொண்டதும் மேலோட்டமான அறிவிலிருந்து ஆழ்ந்த அறிவுக்குமுன்னேறுவதுமான இத்தகைய தத்துவத்தை மாக்சிசத்தின் உதயத்துக்கு முன் எவரும் முனவைக்கவில்லை. முதன் முதலாக அறிவுவளர்ச்சிப் பிரச்சினையை மாக்சிசப் பொருள் முதல்வாதம் தவறற்ற முறையில் தீர்வு செய்தது; அது அறிவு மென்மேலும் ஆழ்ந்த தன்மையைப் பெறும் இயக்கத்தை சிக்கலானதும் மீண்டும் மீண்டும் நிகழ்வதுமான பொருள் உற்பத்தி, வர்க்கப் போராட்டம் ஆகியவற்றில் சமுதாயத்திலுள்ள மனிதனின் புலனறிவு தர்க்கரீதியான அறிவாக மாறும் இயக்கத்தை பொருள்முதல் வாதரீதியிலும், இயங்கியல் ரீதியிலும் சுட்டிக்காட்டியது. லெனின் கூறினர்:- "பொருள், இயற்கை விதி, பொருளாதார மதிப்பு முதலியன சம்பந்தமான பொதுப்படையான கருத்து எதுவும் சுருங்கக்கூறின், விஞ்ஞான ரீதியான (தவறற்றதும், பாரதூரமானதும், அபத்தமற்றதுமான) எல்லாப் பொதுப் படையான கருத்துக்களும் இயற்கையை அதிகமான அளவுக்கு ஆழமாகவும், உண்மையாகவும் பூர்த்தியாகவும் பிரதிபலிக்கின்றது' [2] மாக்சிசம்-லெனினிசம் கருதுவது என்னவெனில், அறிவு வளர்ச்சியின் இரண்டு கட்டங்களும் தனித் தனியியல்புகள் உடையவை. தாழ்ந்த கட்டத்தில் அறிவு புலன்களுக்குத் தோன்றும் வடிவத்தில் உள்ளது; உயர்ந்த கட்டத்தில் அது தர்க்கரீதியான வடிவத்திலுளது; ஆனுல் இரண்டு கட்டங்களும் ஒரே அறிவு வளர்ச்சி நிகழ்ச்சிகளுக்கு உரியவை. புலன் அறிவும் பகுத்தறிவும் இயல்பில் வேறுபட்டவை; ஆனுல், ஒன்றிலிருந்து இன்னொன்றைப் பிரிக்க முடியாது; நடைமுறையின் அடிப்படையில் அவை ஒன்றுபட்டிருக்கின்றன. புலப்படுகின்ற விஷயங்களை நாம் எளிதாகப் புரிந்துகொள்ள முடியாதென்பதையும், புரிந்த விஷயங்களைதான் மேலும் ஆழமாகப் பார்க்க முடியுமென்பதையும் நமது நடைமுறை நிரூபிக்கின்றது. நிகழ்வதென்ன வென்ற பிரச்சினையை மட்டும் புலன்களால் தீர்க்க முடியும்; ஆனல் நிகழ்ச்சிகளின் சாராம்சம் என்னவென்ற பிரச்சினையை தத்துவத்தால் மட்டுமே தீர்க்கமுடியும். இத்தகைய பிரச்சினைகளை ஒரு பொழுதும் நடைமுறைக்குப் புறம்பாக தீர்வுசெய்ய முடியாது. யார் ஒரு விஷயத்தை அறிய விரும்பினுலும், அவருக்கு அதனுடன் தொடர்புகொள்வதைத் தவிர, அதாவது அதன் சூழ்நிலையில் வாழ்வதை (அனுஷ்டானத்தில் ஈடுபடுவதை)த் தவிர வேறு வழியில்லை. முதலாளித்துவ சமூகத்தின் விதிகளை, முன்கூட்டியே நிலப்பிரபுத்துவ சமூகத்தில் அறிந்துகொள்ள முடியவில்லை; ஏனென்றுல் முதலாளித்துவம் அரங்கத்திற்கு வராத காரணத்தினுல் அதற்கு உகந்த நடைமுறை இருக்கவில்லை. மாக்கிசம் முதலாளித்துவ சமூகத்தின் உற்பத்தியாகத்தான் இருக்க முடியும். முதலாளித்துவத்தின் சுதந்திரமான போட்டா போட்டிக் காலகட்டத்தில் வாழ்ந்த கார்ல்மார்க்ஸ், ஏகாதிபத்திய காலகட்டத்திற்குரிய சில விசேட விதிகளை முன்கூட்டியே ஸ்தூலமாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை; ஏனென்றுல் முதலாளித்துவத்தின் கடைசிக் கட்டமான ஏகாதிபத்தியம் அப்பொழுது உதயமாகவில்லை; எனவே அதற்கு ஒத்த நடைமுறை இருக்கவில்லை. லெனினுலும், ஸ்டாலினுலும்தான் இந்தப்பணியை செய்ய முடிந்தது. மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோர் தங்களுடைய தத்துவங்களை எப்படி வகுக்க முடிந்தது? அவர்கள் மேதைகளாயிருந்தனர்கள் என்பது ஒரு காரணம், ஆனுல் அவர் காலத்தின் வர்க்கப் போராட்ட நடைமுறையிலும் விஞ்ஞான சோதனைச் செயலிலும் அவர்கள் நேரடியாகப் பங்கெடுத்ததே பிரதான காரணம்: அது இல்லாமல் எப்படிப்பட்ட மேதையாயிருந்தாலும் வெற்றி காணமுடியாது. 'ஒரு அறிஞன் வாயிற்படி தாண்டி வெளியே போகாமலேயேபிரபஞ்சத்தின் நிகழ்ச்சிகளனைத்தையும் அறிந்திருப்பான்.' என்று சொல்லுவது தொழிலியல் வளர்ச்சியடையாத பழங்காலத்தில் வெற்றுரையாகும். தொழிலியல் வளர்ச்சியடைந்திருக்கும் இன்றைய காலகட்டத்தில் அந்த வாசகத்தின் பொருள் கைகூடுவது சாத்தியம்; எனினும் நடைமுறையில் ஈடுபட்டிருப்பவர்கள்தான் உண்மையான நேரடியான அறிவைப் பெற முடியும்; அவர்கள் தமது நடைமுறைமூலம் 'அறிவு' பெறும்பொழுதுதான். அந்த அறிவு எழுத்து மூலமாகவும் தொழிலியல் மூலமாகவும் 'அறிஞன்' கைக்குக் கிட்டும் பொழுதுதான் 'அறிஞன்' நேரல்லாத முறையில் 'பிரபஞ்சத்தின் நிகழ்ச்சிகளனைத்தையும் அறிந்திருக்க' முடியும்: ஒருவர் ஒரு குறிப்பிட்ட விஷயத்தையோ, விஷய வகைகள் சிலவற்றையோ நேரடியாக அறிய விரும்பினுல் யதார்த்தத்தை மாற்றுவதற்காக அந்த விஷயத்தையோ அந்த விஷய வகைகளையோ மாற்றியமைப்பதற்காக நடைமுறைப் போராட்டத்தில்தானே பங்கெடுப்பதன் மூலமாகத்தான் அவர் அந்த விஷயத்தின் நிகழ்ச்சிகளோடு அல்லது அந்த விஷய வகைகளின் நிகழ்ச்சிகளோடு தொடர்பு கொள்ள முடியும். யதார்த்தத்தை மாற்றுவதற்காகத்தானே பங்கெடுக்கும் நடைமுறைப் போராட்டத்தில்தான் அந்த விஷயம் அல்லது விஷய வகைகளின் சாராம்சத்தை அவர் விண்டு பார்த்து புரிந்துகொள்ள முடியும். அறிவு பெறும்பாதை இதுவே. ஒவ்வொருவரும் உண்மையில் பின்பற்றும் பாதை இதுவே. ஆனுல் இதற்கு நேர்மாருகச் சிலர் வாதிக்கிறுர்களென்றுல் அவர்கள் விஷயங்களை வேண்டுமென்றே திரித்துப் புரட்டுகிருர்கள். உலகத்தில் அதிகமான ஏளனத்துக்கு உள்ளானவர்கள் 'எல்லாம் அறிந்தவர்க'ளாகும்; கேள்விஞானத்தின்மூலம் கொஞ்சம் அரைகுறை அறிவைப்பெற்று விட்டு அவர்கள் 'உலகத்தில் முதல் இலக்க விண்ண'ஞகத் தம்மை விளம்பரப்படுத்திக் கொள்கிருர்கள்; அவர்கள் தம்மைச் சரியாக எடைபோட்டு மதிப்பிட்டுக் கொள்ளவில்லை என்பதைத்தான் இதுகாட்டுகிறது. அறிவு என்பது விஞ்ஞானம்தழுவிய ஒரு விடயம்.

— தொடர்ச்சி அடுத்த இதழில்

## குறிப்புகள்

1. வி. ஐ. லெனின், 'ஹெகலின் 'தர்க்கக் கலை' என்ற நூல்பற்றிய ஒரு பொது ஆய்வு' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.
2. கார்ல்மார்க்ஸின் 'பியோபாக் பற்றிய ஒரு ஆய்வுரை' யையும், லெனினின் 'பொருள் முதல்வாதமும் அனுபவவாத விமர்சனமும்' அத்தியாயம் 2 பகுதி 6 ஐயும் பார்க்கவும்
3. வி. ஐ. லெனின் 'ஹெகலின்' தர்க்கக் கலை' என்ற நூல்பற்றிய ஒரு பொது ஆய்வு' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

# பஞ்சமர் நாவல் விமர்சனம்

ஒரு இலக்கியப் படைப்பாளி தன்னைச் சூழவுள்ள யதார்த்த நிலைமைகளை கணக்கில் எடுத்துக்கொள்ளாது, சமுதாய முரண்பாடுகளையும அவற்றுக்கான சமூக அடிப்படைகளையும் சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் விளங்கிக் கொள்ளாது, தனது மானசீகமான விருப்பு வெறுப்புக்களை மட்டும் வைத்துக்கொண்டு இலக்கியம் படைக்க முற்பட்டால் அது ஒருபோதும் தரமான இலக்கியம் என்ற சமூக அந்தஸ்தைப் பெற்றுவிட முடியாது, பதிலாக அத்தகைய இலக்கியப் படைப்பு சமூகத்தில் நச்சுத்தனங்களைப் பரப்பும் நசிவு இலக்கியங்களின் வகைகளிலே சேர்த்துக் கொள்ளத் தகுதி பெற்றதாகிவிடும்.

அண்மையில் டானியல் என்ற எழுத்தாளர் எழுதிய 'பஞ்சமர்' நாவல் இருபாகங்களையும் உள்ளடக்கி ஏராளம் எழுத்துப் பிழைகளுடனும், மோசமான அச்சுப் பதிப்புடனும் இந்தியாவிலிருந்து வெளியிடப்பட்டது. அறுபது ரூபா விலைகொண்ட இந்நாவலின் உள்ளடக்கத்திற்கு ஒரு கண்டிப்பான விமர்சனம் மிகவும் அவசியமாகும். இந்நாவல் தமிழ் மக்கள் மத்தியில் வாழ்ந்துவரும் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வு, வரலாறு, போராட்டம், போராட்டங்களுக்கான தத்துவ வழிகாட்டல், அரசியல் தலைமை போன்றவற்றில் திட்டமிட்ட திரிபுகளையும், மோசமான கொச்சைப்படுத்தல்களையும் நிறையக் கொண்டிருக்கின்றது. நூலாசிரியர் 'பஞ்சமர்' சாதிகளில் ஒன்றைச் சேர்ந்தவர் என்பதால் அவரது குறுகிய பித்தலாட்டம் நிறைந்த கருத்துக்கள் தான் முழுத்தாழ்த்தப்பட்ட மக்களின் கருத்தாக அமைந்துவிடமுடியாது.

சாதி அமைப்பினதும், தீண்டாமையினதும் கோரக் கொடுமைகளால் தாக்குண்டு அல்லலுற்ற ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் தமது அடிமை விலங்கறுக்க நடாத்திய புகழ்மிக்க போராட்டங்கள் ஒரு வரலாறு என்பது மறுக்க முடியாத உண்மை. சாதிக் கொடுமைக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டங்கள் காலத்துக்குக் காலம் பல்வேறு வழிகளிலும், ரூபங்களிலும் நடத்தப்பட்டு வந்தபோதிலும் அவை முழுமையான பலாபலன்களைக் கொடுக்கத் தவறிவிட்டன. ஆனல் 1966ம் ஆண்டு அக்டோபர் 21இல் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட புரட்சிகர எழுச்சியுடன்தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்கான போராட்டம் புது உத்வேகம் பெற்று புதிய கால கட்டத்திற்குள் பிரவேசித்தது. அன்றுவரை குறுகிய சாதிவாதக் கண்ணோட்டத்தில் அணுகப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் சமத்துவத்திற்கான போராட்டமானது பரந்த வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியாக மாறி அரசியல் உள்ளடக்கத்துடனும், ஸ்தாபன அமைப்புடனும் வீரமாகவும், வேகமாகவும் முன்னெடுக்கப்பட்டது, 1966ம் ஆண்டை தொடர்ந்த முதல் ஐந்தாண்டுகளில் தியாகங்களும் வீரத்தழும்புகளும் கொண்ட விட்டுக்கொடுக்காத புரட்சிகரப் போராட்டங்களை கிராமம் கிராமமாக மக்கள் முன்னெடுத்தனர்; சுன்னுகத்தில் நடைபெற்ற சாதி எதிர்ப்பு ஊர்வலத்துடன் எழுந்த எழுச்சியானது சங்கானையில் பெரும் சுவாலைவிட்டு போராட்டத்தீயாக எரிய ஆரம்பித்தது. அச்சுவாலையின் ஒளியில் வட

## ★ வரலாற்றை திரிபுபடுத்தி கொச்சைப்படுத்துகிறது

## ★ போராட்டங்களை சிறுமைப்படுத்தி அதன் இலக்கை கேவலமாக்கிறது

பகுதிபூராகவும் தாழ்த்தப்பட்ட மக்கள் தட்டி எழுப்பப்பட்டனர். ஸ்தாபனரீதியில் அணிதிரட்டப்பட்டனர். புதிய புதிய போராளிகள் போராட்ட அரங்கிற்குவந்து கொண்டிருந்தனர். குறுகிய சாதிவாதக் கண்ணோட்டத்தைக் கட்சி நிராகரித்தது. வர்க்கப்போராட்ட அரசியல் பாதையில் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலுள்ள சாதாரண உழைக்கும் மக்களும், உயர்சமூகம் எனப்படுவோர் மத்தியிலுள்ள முற்போக்கு எண்ணம் கொண்ட மக்களும இணைந்து போராட்டங்களை முன்னெடுத்தனர். அலையலையாக முன்னேறிய மக்களின் போராட்டங்களுக்கு ஜாதி வெறியர்களும் — பிற்போக்குவாதிகளும் ஈடுகொடுக்க முடியாது பின்வாங்கினர். உரிமைகள் மறுக்கப்பட்ட பல தேநீர்க் கடைகளும், ஆலயக் கதவுகளும் பொதுஇடங்களும் சமத்துவமாக திறந்துவிடப்பட்டன.

கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேச தலைமை கடைப்பிடித்த சரியான கொள்கையும் வழிகாட்டலும், தோல்வி காணுப் போராட்டங்களை மக்கள் முன்னெடுக்க உதவின; கட்சி போராட்டங்களுக்கு வழி காட்டி தலைமைதாங்கியது; போராட்டங்கள் கட்சிக்குப் புதிய உறுதியான போராளிகளையும், ஊழியர்களையும் கொண்டுவந்தன; இதுவே தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்ந்த கட்டப்போராட்டத்

## ★ சுரண்டும் ஒரு முதலாளி சுரண்டப்படும் மக்களுக்காக இலக்கியம்படைக்கமுடியுமா?

தின் சுருக்கம், இதுவே உண்மை வரலாறு என்பது யாராலும் மறுக்கமுடியாது.

அடக்குமுறைகளுக்கும், அநீதிகளுக்கும் உள்ளான ஒரு சமூக மக்களின் வாழ்க்கை நிலைமைகளையும்போராட்டங்களையும் வரலாற்றில் இடம்பெறச் செய்வதில் இலக்கியத்திற்கு உயர்ந்த் ஒரு பொறுப்பு இருக்கிறது. அங்கே மக்களின் பரந்த போராட்ட வரலாற்றை யதார்த்தபூர்வமாகவும், இலக்கிய ரசனையோடும் சித்தரிப்பதற்கு நாவல் இலக்கியம் சிறந்த ஒரு இலக்கிய வடிவமாகும்.

பரத்தகளம், யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் பல பாத்திரங்கள் தத்துவம், அரசியல் நடைமுறைபோன்றவற்றை உள்ளடக்கிய சரியான வழிகாட்டலுக்கான சந்தர்ப்பம் யாவும் நாவல் இலக்கியத்தில் தாராளமாகக் கையாளக் கூடிய சந்தர்ப்பம் உண்டு. ஆனல் இவை யாவற்றையும் எதிர்மறையாக ஒரு நாவலாசிரியன் தனது நாவல் இலக்கியத்தில் குருட்டுத்தனமான முறையில் கையாண்டால் அது அப்போராட்ட வரலாறு கொண்ட மக்களின் யதார்த்தமான நிலைமைகளை திரித்துக் கூறுவதாக அமைந்துவிடும். அத்தகைய இலக்கியம் மக்களின் உண்மையான அங்கீகாரத்தை எவ்வகையிலும்பெற்றுக்கொள்ளாது.

இந்த வகையிலே 'பஞ்சமர்' நாவலை பார்க்கும் போது அது மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு எந்தவிதத் தகுதியும் அற்ற ஒரு நசுவு இலக்கியமாகவே கொள்ள முடியும்.

பஞ்சமர் நாவலின் களம் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வை சரியானவிதத்தில் பிரதிபலிக்கவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வுக்கும் — சாதி, தீண்டாமை என்ற கொடுமைகளுக்கும் உயர்சாதியினர் எனப்பட்டவர்களுக்கும் இடையிலுள்ள முரண்பாடுகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ள சமூக அடிப்படை என்ன? என்பதை பஞ்சமர் நாவலின் ஒரு வரியில் கூட காண முடியவில்லை. உயர்சாதி எனப்பட்டவர்களின் வீடுகளில் இடம்பெறும் முறை தவறிய பாலுறவுகளை மிக நுணுக்கமாகவும் ஆபாச இலக்கியப் பாணியிலும் சுவைத்து மகிழும் ஆசிரியருக்கு வர்க்கக் கண்ணோட்டம் சூனியமாகிக் கிடப்பதை பஞ்சமரில் நன்கு காணக் கூடியதாகவுள்ளது. ஆசிரியர் கூறும் ஐந்து சாதிகளையும் ஏனைய இடைச் சாதிகளையும் யதார்த்தத்திற்கு முரண்பட்ட வகையில் வெறும் செயற்கைபூர்வமாக ஒன்றிணைத்து தனது நாவலை எழுதி உள்ளார். ஆசிரியர் ஆங்காங்கே தனது 'குறுகிய சாதிவாத'க் கண்ணோட்டங்களை அழுத்தி உள்ளதையும் அவதானிக்க முடிகிறது,

ஒரு போராட்ட வரலாற்றை எடுத்தியம்பும் நாவலின் கதாபாத்திரம் எப்பொழுதும் முன்னுதாரணம், உறுதி, தலைமைதாங்கும் பண்பு, சமூகத்தை அப்பாத்திரம் பார்க்கும் பார்வை, சமூக விடுதலைக்கு அப்பாத்திரம் வழிகாட்டி நிற்கும் கொள்கைத் திறன் போன்றவற்றல் உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆனல்'பஞ்சமர்'ரில் வரும் 'ஐயாயண்ணன்' என்ற கதாபாத்திரம் ஒரு அப்பாவிப் பாத்திரமாகவே காட்சி தருகிறது. கள்ளுக்கொட்டிலிலும், கடைத் தெருக்களிலும் செய்திகள் சேகரித்து, பின்பு அதற்குத் தலை, கால், வால் வைத்து விளக்கங்கள் சொல்லித் திரியும் வீடுவாசல், குடும்பமற்ற ஒரு பரதேசிப் பாத்திரம் தான் பஞ்சமர் நாவலின் கதாபாத்திரம். இப்பாத்திரத்திடம் ஒரு சமூக பொறுப்புணர்வையோ அன்றி சமூக மாற்றத்திற்கான ஒரு உறுதியான இலட்சிய மனப்பான்மையோ அல்லது ஒரு போராட்டத்தை வழிநடத்தி வெற்றிகாணும் திறனையோ யாரும் எதிர்பார்க்க முடியாது. காரணம உதிரித் தன்மை கொண்ட எவராலும் எந்த ஒரு விடயத்திலும் பொறுப்புணர்வுடன் செயல்பட்டு முன்செல்வதை காண முடியாது. வர்க்கநிலையிலும் உதிரிகளின் தன்மைக்கு ஒரு அடிப்படை நிலை இருக்கவே செய்யும். ஆதலால் ஒரு உதிரித் தன்மைகொண்ட பாத்திரம் பஞ்சமரின் கதாபாத்திரமாகி நிற்கின்றது. இது நாவலின் வெறுமைக்கு தக்க சான்ருகும்.

அதேபோல் இன்னுமொரு முக்கிய பாத்திரமாக காட்ட முயற்சிக்கும் குமாரவேலன் செயற்கையான முறையில் சந்தர்ப்பங்களில் தவறுன அரசியல் சுலோகங்களுடன் போராட்டங்களின் முன்னணியில் நிற்பதை காணமுடிகிறது. குமாரவேலனின் அரசியல் வர்க்க உணர்வு அடி

## ★ வர்க்க உணர்வுக்கு பதில் சாதி உணர்வை ஊட்டுகிறது

## ★ நாவலின் ஆபாசத் தன்மை ஆசிரியரின் உள்ளக் கிடக்கையே

மட்டமாக இருக்கிறது. அதே போல்தான்முறையற்ற கள்ள உறவால் பிறந்த பிள்ளை என்ற உணர்வும், தனது உயர்சாதித் தாயையும் அவளைச் சார்ந்தோரையும் பழி வாங்கும் நோக்கங் கொண்ட குறுகிய சாதிவாத உணர்வும் தான் குமாரவேலனின் உந்து சக்தியாக மிளிர்கிறது .குமாரவேலன் என்ற பாத்திரத்தின்மூலம் நாவலாசிரியர் போராட்டங்களில் முன்னின்ற ஏராளமான தாழ்த்தப்பட்ட இளைஞர்களின் இலட்சிய உணர்வுகளைக் கொச்சைப்படுத்தி கேவலமாக்குவதையே உணர முடிகிறது

நாவலின் அநேக பக்கங்கள் 'பாலுறவு' சம்பந்தப்பட்ட ஆபாச சம்பவங்களுக்காக ஒதுக்கப்பட்டுளது. அறுபது வயதிலும் திருமணம் செய்தால் தவறு இல்லையே என்பதற்கு இந்நூலாசிரியர் ஒரு பக்கம் நிறைய உலக உதாரணங்களை எடுத்துக் காட்டுகிருர். சண்முகம்பிள்ளை முதலாளியார் என்ற பாத்திரத்தின்மூலம் இந்த அறுபது வயதைத் தாண்டிய நூலாசிரியர் தனது 'உள்ளக் கிடக்கை'யை வெளிச்சமிட்டுக்காட்டுகிருர். நாவலில் வரும் ஆபாசக் காட்சிகளைப் பற்றி எடுத்துக்கூறுவது வேறு ஒருவகை ஆபசமாகிவிடும். மொத்தத்தில் பஞ்சமர் நாவலின் அட்டையில் ''வயதுவந்தவர்களுக்கு மட்டும்' என்று தடித்த எழுத்தில் போடப்பட்டிருந்தால் மிகவும் பொருத்தமானதாக அமைந்திருக்கும்.

பஞ்சமர் நாவலில் பல தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்சாதியினர் எனப்படுவோரால் கொல்லப்படும் சந்தர்ப்பங்கள் பலவருகின்றன. முடிவில் பஞ்சமரின் கதாபாத்திரமான ஐயாண்ணனும் சாதி வெறியரின் தாக்குதலால் சரிகின்ருர் என்றே கூறப்படுகிறது; அதேவேளை எந்த ஒரு உயர்சாதிவெறியனும் தாழ்த்தப்பட்ட மக்களால் கொல்லப்பட்ட சம்பவத்தை நாவலில் காணமுடியவில்லை. ஒரே ஒரு துவக்குச்சூட்டுக் காரன்பட்டும் கொலைப்படுகிருன். அதுவும் போராடும் மக்களால் அல்ல கிட்டினனின் வீமன் நாயினுல் என்றே கூறப்படுகிறது. நாவலாசிரியர் உயர்சாதி வெறியர்களைக் கொல்லாமல்விட்டது தற்செயலானதல்ல; ஆசிரியரின் வர்க்கநிலையின் துணிச்சல் அந்தளவுதான். அவரது இயலாமையும், கோழைத்தனமும் பல சாதிவெறியர்களைப் பலிகொண்டு வீரப் போராட்டம் நடத்திய மக்களின் உண்மை வரலாற்றையே திரித்துவிடுகிறது.

மொத்தத்தில் 'ஐயாண்ணன்' என்ற ஒரு பொறுப்பற்ற பாத்திரத்தின்மூலம் உயர்சாதி எனப்படுவோரின் வீடுகளில் நடக்கும் அந்தரங்க விஷயங்களை வெளிக் கொண்டுவந்து தனது ஆபாச இச்சைக்கு இரைதேடவே இந்நூலாசிரியர் பஞ்சமர் நாவலின் பக்கங்களைச் செலவு செய்துள்ளார், அத்துடன் தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டங்களைக் கொச்சைப்படுத்தி — இழிவுபடுத்தி அதன் உண்மையான புரட்சிகரத் தன்மையை மாசுபடுத்தி எதிர்ப்புரட்சிகர வேலையை தனது 'முதலாளி' என்ற ஸ்தானத்திலிருந்து கச்சிதமாக எழுதி முடித்திருக்கின்ருர். மேற்படி எழுத்தாளர் ''மக்களிடமிருந்து பெற்று மக்களுக்கு திருப்பிக் கொடுப்பது'' என்று தனது முன்னுரையில் கூறியுள்ளார். ஆனல் மக்களின் பலமான நல்ல அம்சங்கள் சகலரையும் விட்டுத் தள்ளிவிட்டு பலவீனமான, தவருன சகலவற்றையும் எழுதியுள்ளார். இங்கே ஒரு முற்போக்கு இலக்கியவாதி என்ற நிலைக்கு நேர் எதிராக நின்று தரமற்ற 'மஞ்சள் இலக்கியவாதி' களின் வரிசையில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

ஒரு எழுத்தாளனின் உளப்பாங்கை அவனதுஎழுத்துக்கள்தான் பிரதிபலிக்க முடியும்; அதேபோல் ஒரு எழுத்தாளனின் மக்கள்சார்பு நிலையை அளவிட அவனின் எழுத்தே உரைகல்லாக அமையமுடியும். பஞ்சமரின் மூலம் அதைப் படைத்த எழுத்தாளனையும், அவனது வர்க்கநிலையையும் மக்கள் நன்கு இனம் கண்டுகொள்ள முடியும்.

-வர்க்கப் போராட்டத்தில் ஊன்றியில்லாத தேச விடுதலைபோராட்டம் தேசிய வெறிக்கும்......

-வர்க்கப்போராட்டத்தில் ஊன்றிநில்லாத இன விடுத

(7-ம் பக்கம் பார்க்க)

# பிரஜாவுரிமையை மறுப்பவர்கள் தார்மீகம் பற்றிப் பேசுகிறார்கள்!

தோட்டத் தொழிலாளர்களும் இலங்கையின் ஏனைய உழைக்கும் மக்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பல பொதுவானவையே யாகும். ஆனால் இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் சல பிரச்சினைகள் அவர்களுக்கே தனித்துவமானவையாகும்.

மேற்கண்டவாறு உழைக்கும் மக்கள் கட்சியின் பொதுச் செயலாளரும், செங்கொடிச் சங்கத்தின் தலைவருமான தோழர் எச். எல். கே. கரவிட்ட அப்புத்தளை தம்பத்தனையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போது கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் தோட்டத்தொழிலாளர்களை மோசமான நிலையில் பாதிக்கும் பிரச்சினைகளில் ஒன்றுதான் பிரஜாவுரிமைப் பிரச்சினையாகும். இன்றைய விழிப்புற்ற காலகட்டத்தில் எம்மத்தியில் நாடற்றவர்களென்று சிலரைக் குறிப்பிடுவது மிக வெட்கக்கேடான ஒரு விடயமாகும். இதைவிடக் கேவலமானது என்னவெனில் இவ்வாறான மக்கள் வாழும் நாட்டின் ஆட்சியாளர்கள் ''ஜனநாயக சோஷலிசக் குடியரசு'பற்றியும் தார்மீக சமுதாயம்பற்றியும் உரக்கப் பேசுவதுதான்.

நாடற்றவர் என்பதன் பொருள் பிரஜாவுரிமையற்றவர் என்பதுதான். ஒரு நாடற்ற நபர் என்றால் பிரஜைகள் அனுபவிக்கும் அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டவராகும். இவர்கள் இலங்கையின் கடவுச்சிட்டை பெற்று வெளிநாடுகளுக்கும் செல்ல முடியாது. எவ்வளவு தகுதிபெற்றிருந்த போதிலும் அரசாங்கத்தில் தொழில் பெறவோ அல்லது இலவச உயர்கல்வியோ பெற முடியாது. எமது உடனடிக் கவனத்தைப்பெற வேண்டியது இப்பிரச்சினைதான். ஒரு சில லட்சம் மக்கள் நாடு அற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள். இந்நிலைமையை முடிவுக்குக் கொண்டுவர எந்த ஒரு அரசாங்கமாவது இதுவரை நேர்மையான முயற்சி செய்யவில்லை.

இது ஒரு மனிதாபிமானமற்ற செயலாகும், இந்த உலகில் பிறந்த எந்த ஒரு மனிதனும் தான்ஏதாவது ஒருநாட்டுப்பிரஜை என்று சொல்லக் கூடியதாக இருத்தல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட நாட்டின் பிரஜை என்ற அடிப்படையில் ஒருவனோ ஒருத்தியோ தனது எதிர்காலத்தை தீர்மானிக்ககூடியதாக இருத்தல் வேண்டும். ஆனால் எம்மத்தியில் பல இலட்சம் உழைக்கும் மக்கள் நாமும் இலங்கைப் பிரஜைகள் என்ற நிலைக்குவரும் சந்தர்ப்பம் கிடைக்குமா என்பதைத் தெரிந்து கொள்ளாமலே இலங்கைக்காக வியர்வை சிந்தி உழைக்கின்றனர்

இந்த நிலைமைகள் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். இரண்டு அரசாங்கங்களும் உண்மையில் விசுவாசமாக தீர்க்க விரும்பினால் இந்த விடயத்தை மூன்று மாதத்திற்குள் தீர்த்து விடலாம். இலங்கையும் இந்தியாவும் நட்புநாடுகள். இலங்கை அரசாங்கமே இந்தப் பிரச்சினைக்கு முதல் முக்கியத்துவம் கொடுத்து இதற்காக நிரந்தரத் தீர்வொன்றை வகுத்துக் கொள்ளல் வேண்டும்.

ஜே. ஆர். ஜயவர்த்தனா அரசாங்கத்தில் மந்திரிப்பதவி வகிக்கும் இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் இந்தப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையுமே செய்ததில்லை. தோட்டத்

## அப்புத்தளையில் தோழர் கரவிட்ட பேச்சு

தொழிலாளர்கள்பெரும்பான்மையினரை பிரசாவுரிமை இழக்கச் செய்த பிரசாவுரிமைச் சட்டங்களுக்கு ஆதரவாக வாக்களித்த திரு. ஜெயவர்த்தன தலைமைதாங்கும் மந்திரி சபையில்தான் திரு தொண்டமான் மந்திரியாக விளங்குகின்றார்.

மனிதாபிமானக் கண்கொண்டுபிரச்சினையை அணுகினால் பிரசாவுரிமை பிரச்சினைக்கான தீர்வு மிகவும் சுலபமானது. இவ்வாறான தீர்வை இந்தியா ஏற்றுக் கொள்ளுமென்பதில் சந்தேகமில்லை.

அப்படியானால் மனிதாபிமானத் தீர்வுதான் என்ன? பாதிக்கப்பட்ட மக்களை அவர்கள் இலங்கை பிரஜைகளாகவா அல்லது இந்திய பிரஜைகளாகவா வரவிரும்புகிறார்கள் என்பதை தீர்மானிக்க விடல்வேண்டும். இந்த விடயம் முற்றுமுழுதாக சுயவிருப்பத்தில அடிப்படையில் இருக்கவேண்டுமே தவிர ஏதோ ஒரு கோட்டா அடிப்படையில் அல்ல. இந்தியப் பிரஜைகளாக விரும்பும் இந்திய வம்சாவழியினர் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி இந்திய அரசாங்கத்தை தூண்டலாம் என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் இலங்கைப் பிரஜைகளாக வர விரும்பும் அனைவர்க்கும் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்க வேண்டும், இந்த அணுகுமுறையைக் கடைப் பிடித்தால் பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிடலாம்.

பிரசாவுரிமைப் பிரச்சினைக்கு இது ஒன்றே நியாயமானதும் — மனிதாபிமானதுமான தீர்வாக அமையும் என்பதைத் தொண்டமான் தனது நண்பன் ஜே.ஆர் ருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

தொண்டமான் இந்தியாவிற்குப்போய் அங்கே சாயிபாபாவைச் சந்தித்தபோது இ.தொ.கா. தலைவரின்பேத்தியாருக்கு சாயிபாபா தாலிக் கொடி உருவாக்கிக்கொடுத்ததாக பத்திரிகைச் செய்திகள் வெளிவந்துள்ளன. திரு. தொண்டமான் தனது பேத்திக்கு சாயிபாபா மூலம் தாலிக்கொடி பெறக் கூடிய சக்திபடைத்தவர் என்பதில் சந்தேகமில்லை.

இந்தவிதமான வித்தைகளில் நேரத்தை வீணாக்காமல் சாயிபாபாவிலும் பார்க்கப் பிரயோசனமுள்ள ஜே. ஆர். மூலமாக இலங்கையின் பிரச்சினைகளையும், தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளையும் தீர்த்துவைப்பதற்கு திரு. தொண்டமான் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க முயற்சித்தால் பிரயோசனமாக இருக்கும்.

ஜே. ஆர்.ரிலும் பார்க்க சாயிபாபாவின்மீது தொண்டமானுக்கு அதிகம் நம்பிக்கை இருந்தால் அவர் சாயிபாபாவின் உதவியை நாடி தோட்டத் தொழிலாளர்களின் விருப்பத்திற்கேற்ப பிரசாவுரிமையைப் பெற்றுக் கொடுக்கவேண்டும். அத்துடன் நின்றுவிடாது நாட்டின் ஏனைய தொழிலாளருக்கு ஜே. ஆர். அரசாங்கம் வழங்கிய ரூபா 70, ரூபா 107, சம்பள உயர்வையும் தோட்டத் தொழிலாளருக்கும் சாயிபாபாவின் மந்திரஜாலத்தால் பெற்றுக்கொடுக்கமுன்வரல் வேண்டும் என்றும் கூறினார். ★

## பஞ்சமர் விமர்சனம்

6-ம் பக்கத் தொடர்...

லைப் போராட்டம் இனவெறிக்கும்... ..

-வர்க்கப்போராட்டத்தில் ஊன்றிநில்லாத தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டம் குறுகிய சாதிவெறிக்கும் இட்டுச்செல்வது தவிர்க்கமுடியாததாகும்.

எப்படி இனவிடுதலைக்கான போராட்டத்தில் அதே இனத்தின் மத்தியிலுள்ள முதலாளி வர்க்கம் இனவெறிப் போராட்டத்திலிட்டுச் செல்வார்களோ, அதேபோல் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலுள்ள முதலாளிகளும் சாதிவெறிக்கு இட்டுச்செல்வர். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவிசெய்வது போல் நடித்து குறுகிய சாதிவெறியைக்கிளப்பி தமது சொந்த வர்க்கநலனை இவர்கள் மேம்படுத்திக்கொள்வதை காண முடியும். இதைப் 'பஞ்சமர்' நாவலிலும் அதன் ஆசிரியரின் அன்றாட வாழ்விலும் நன்கு காண முடியும்.

பிற்குறிப்பு:-

பஞ்சமர் நாவல் எழுதியவரான டானியல் என்ற எழுத்தாளர் பல லட்சம் ரூபாய்களுக்கு அதிபதியாக இருக்கிறார். ஒருகாலத்தில் எதுவுமற்ற நிலையிலிருந்த இந்த எழுத்தாளருக்கு இவ்வளவு சொத்துசுகம் எப்படி ஏற்பட்டது? அது மாக்சிசம் சுட்டிக்காட்டும் சுரண்டலின் அடிப்படையிலேதான் ஏற்பட்டது. தனது வெல்டிங் — லேத் தொழிற்சாலையில் தொழிலாளர்களையும், வேலை செய்விக்க வரும் வாடிக்கையாளர்களையும் (அனேகர் தாழ்த்தப்பட்ட மக்கள்) பெரும்பாலும் சுரண்டியே இவரால் சொத்துகள் சேர்க்க முடிந்தது. இப்படிப்பட்ட ஒரு நபரால் சுரண்டலுக்குள்ளான மக்களுக்காக வர்க்கக் கண்ணோட்டத்தில் இலக்கியம் படைக்க முடியுமா? அன்றிலிருந்து இன்றுவரை வர்க்கப் போராட்ட அரசியலையோ அதன் அடிப்படையில் அமைந்த கட்சி ஸ்தாபனங்களையோ முதன்மைப் படுத்தாத இந்த எழுத்தாளர் தன்னைச்சுற்றி நாலு பேர்களை வைத்துக்கொண்டு குறுகிய சாதிவாத உணர்வுகளைத்தூண்டி கட்சி நடவடிக்கைகளுக்கு எதிராகவே செயல்பட்டு வந்துள்ளார். இவரது இலக்கியம் எதையும் எக்காலத்திலும் கட்சி ஸ்தாபனம் ஏற்றுக்கொண்டதல்ல. சுரண்டல், சொத்துசேகரிப்பு தற்புகழ்தேடல், குறுகிய சாதியுணர்வு போன்றவை தான் இந்த எழுத்தாளரின் பண்புகள். இத்தகைய நபரிடம் நேர்மையான ஒரு போராளி அல்லது போராடும் மக்கள் சரியான ஒரு அரசியல் கருத்தையோ, தரமான ஒரு இலக்கியப் படைப்பையோ காண முடியாது. ★

## மலையக ஆசிரியர் நியமனமும் தொண்டர் ஆசிரியர்களும்

ஆசிரிய பற்றாக்குறை என்பது இலங்கையில் முதலாம் வகுப்பு மாணவரிடமே கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். அந்தளவுக்கு புரையோடிவிட்ட புண்ணாக அமைந்துவிட்டது. இந்த நிலையில் தொண்டர் ஆசிரியர் என்று எதுவித வேதனமும் இல்லாமலும் அல்லது ஒரு சிறுதொகை வேதனத்துடன் பலர் நியமிக்கப்பட்டனர் ஒரு காலத்தில். ஆனால் இவர்களது நியமனம் நிரந்தரமாக்குவதில் அரசாங்கம் நினைத்ததுபோல அவ்வளவு இலகுவில் இயலாமல் போயிற்று. ஒரு போராட்டத்தின்மூலமே தொண்டர் ஆசிரியர்கள் நியமனமாயினர்

இன்றும் இப்பிரச்சினை விஸ்வரூபமெடுத்துளது யாவரும் அறிந்ததே. பாடசாலைகள் பல 'பள்ளிக்' கூடங்களாக மாறுவதை விரும்பாத அதிபர்கள் வட்டாரக் கல்வி அதிகாரியின் அனுமதியுடன் தொண்டர் ஆசிரியர்கள் நியமிப்பதில் முனைந்தனர். ஆனால் வட்டாரக் கல்வி அதி

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## தோட்டத்தொழிலாளர்களே தொண்டமானின் கூற்று புரிகிறதா?

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற யூ.என் பி: கட்சியின் கருத்தரங்கு ஒன்றில் 'நான் ஏன் யூ.என்.பி. அரசில் இணைந்துகொண்டேன்' என்ற தலைப்பில் திரு. தொண்டமான் அவர்கள் பேச்சு ஒன்றைப் பேசியிருந்தார். அவரது பேச்சைப் பார்த்தபோது அவர் எவ்வளவு தூரத்திற்குதோட்டத் தொழிலாளர்களை ஒன்றுமறியாத முட்டாள்களாக்கி இருக்கிறார் என்பதை காண முடிந்தது.

கடந்த அரசாங்க காலத்தில் தோட்டத் தொழிலாளர்கள் பட்ட கஷ்டங்களை மிக விபரமாக எடுத்துக் கூறிய தொண்டமான் அதே பிரச்சினைகள் இன்றைய அரசாங்கத்தாலும் தீர்க்கப்படாது புறக்கணிக்கப்பட்டு வருவதைப்பற்றி மெல்லிய குரலில் நழுவவிட்டுவிட்டார். தமக்கு அமைச்சர் பதவியும், தன்னோடு உள்ளவர்களுக்கு மாவட்ட சபை உறுப்பினர் பதவிகளும் — ஏனைய உயர் நிர்வாகப் பதவிகளும் கிடைத்ததையே தொண்டமான் தோட்டத் தொழிலாளர்களுக்கு யூ. என். பி. யால் வழங்கப்பட்ட அதி உயர்ந்த கொடைகளாகக் காட்ட முற்படுகின்றார். அவர் தனது பேச்சின் ஒரு கட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்றைய அரசில் பொருளாதாரச் சலுகைகள் கிடைக்காதபோதிலும் வாக்குரிமைச் சலுகை நிறையக் கிடைத்திருப்பதாக கூறி அதற்கு உதாரணமாக மாவட்ட சபை பதவிகளைக் காட்டியுள்ளார்.

உண்மையில் யூ.என்.பி. யுடன் தொண்டமான் சங்கமமாகியதன் மூலம் தோட்டத் தொழிலாளர்கள் எதையும் பெற்றுவிடவில்லை. இனவாத வன்செயல்கள்மூலம் உயிர்களையும் உடமைகளையும் இழந்துள்ளனர், நிர்வாகக் கெடுபிடிகளால் வேலையையும் இழந்துள்ளனர். மேலும் கூறுவதானால் தமது தோட்டங்களையும் — தொழில்களையும் இழந்துள்ளனர். அதே வேளை தொண்டமானும் அவரது சகாக்களும் யூ.என். பி. யின் கீழ் நிறையப் பெற்றுள்ளார்கள், தாம் பெற்றுக் கொண்டவைகளை தோட்டத் தொழிலாளர்கள் பெற்றுக் கொண்டதாக காட்டுவது ஏமாற்றின் உயர்ந்த ரகமே யாகும். தொண்டமானின் இப்பேச்சு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தோட்டத் தொழிலாளர்கள் யூ. என். பி.க்கு தவறாது வாக்களிக்க வேண்டும் என்ற கோரிக்கை விடுப்பதாகவே இருந்தது. ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் இன்றைய நிலையில் எந்த ஏமாற்றுக்கும் இடம் கொடுக்கமாட்டார்கள். யூ. என்.பி.யையும் — தொண்டமானையும் கடந்த ஐந்து வருடகால ஆட்சியில் அவர்கள் நன்கு இனம் கண்டுவிட்டனர். ★

# யூ.என்.பி. மீண்டும் பதவிக்கு வந்தால் நாடு பெரும் நாசத்தை எதிர்கொள்ளும்

## தனி ஒரு அபேட்சகரும்-பொது வேலைத்திட்டமும் அவசியம்

### இடது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தோழர் செந்தில் பேச்சு!

இலங்கை மக்களில் ஏகப் பெரும்பான்மையோரின் பொது எதிரி யூ.என்.பி.யும் அதன் சகபாடிகளும் தான் என்பதைக் கடந்த காலமும், தற்போதைய ஐந்துவருடகால ஆட்சியும் ஐயத்திற்கு இடமின்றி நிரூபித்துவிட்டது. பாசிசத் தன்மை கொண்ட ஆட்சியை நடத்திவரும் இந்த அரசு விரைவில் நடத்தி முடிப்பதற்கு திட்டமிட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யூ.என்.பி.யைத் தோற்கடிப்பது முற்போக்கு — ஜனநாயக, தேசபக்த சக்திகளின் மிகமுக்கியமான கடமையாகும்.

மேற்கண்டவாறு தோழர் கே. செந்திவேல் இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின் (இடது) சார்பில் இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கத்தின் விரிவுபடுத்தப்பட்ட வடபிரதேசக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொண்டு இன்றைய அரசியல் நிலைமைபற்றி உரையாற்றும்போது கூறினார்.

கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் தோழர் செந்திவேல் தொடர்ந்தும் கூறுகையில், "தேர்தல்களின் மூலமாக மட்டும் யூ. என். பி. யை முற்றுமுழுதாகத் தோற்கடிக்க முடியாது என்பதை எமது கட்சி ஏற்கனவே வலியுறுத்திவருகிறது. ஆனால் சகல பாராளுமன்ற ஜனநாயக நடைமுறைகளும் மீறப்பட்டு, தனிநபர் சர்வாதிகாரத்தை நோக்கி காரியங்கள் ஆற்றப்படும் இன்றைய நிலையில் தேர்தல்முனையிலும் யூ.என்.பி. தோற்கடிக்கப்பட வேண்டியது ஒரு அவசியத் தேவையாகி உள்ளது.

நாட்டை முற்றுமுழுதாக நவகாலனித்துவப் பிடிக்குள் இறக்கி, தேசிய பொருளாதாரத்தை சின்னாபின்னப் படுத்தி, மக்களின் வாழ்க்கை நிலைமைகளை யூ. என். பி. ஆட்சிநாசப்படுத்தி விட்டது. தனது ஐந்துவருடகால ஆட்சிக் காலத்தில் மக்கள்விரோத தொழிலாளர்விரோத, ஜனநாயக விரோத, இனவாத நடவடிக்கைகளை தாராளமாக நடைமுறைப்படுத்தி வந்துளது. இத்தகைய கட்சியும் அதன் தலைவர்களும் மீண்டும் அதிகாரத்திற்கு வந்தால் நாடு பெரும் சர்வாதிகார நாசத்தையே எதிர்கொள்ள வேண்டி ஏற்படும்.

கடந்த ஆட்சிக்காலத்தில் தமிழ்மக்கள் சார்பாக உரிமைக்குரல் கிளப்புவதாக கொக்கரித்த தமிழர் கூட்டணித் தலைவர்கள் இன்றைய ஆட்சியிலும் பார்க்கப் பன்மடங்கு நேரடியான இன இடக்குமுறைகளில் ஈடுபடும் இன்றைய ஆட்சிக்கு வெண்சாமரை வீசுகிறார்கள். அன்று காங்கேசன்துறைத் தொகுதியின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இராஜினாமா செய்துஅரசாங்கத்தை எதிர்க்கத் தமிழ்மக்களின் ஆணையைப் பெற்ற அதே தலைவர்கள் இன்று யாருடைய ஆணையைப் பெற்று யூ.என்.பி.யுடன் கூடிக்குலாவுகின்றனர். 1981 இல் இடம் பெற்ற இனவாத வன்செயல்களால் தமிழ்மக்கள் யூ. என். பி.க்கு எதிராகக் கொதிப்புற்ற நிலையிலிருந்தபோது 'பாராளுமன்றப் படி ஏறமாட்டோம்' என்று சூளுரைத்த கூட்டணித் தலைவர்கள் வெறும் சாக்குப் போக்குகளை கூறித் தமிழ்மக்களை ஏமாற்றிவிட்டு காலக்கெடு முடிவதற்கு முன்பே பாராளுமன்றத்துக்குள் நுழைந்துவிட்டார்கள். சமரசப் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் யூ. என். பி. யுடன் ஒட்டி உறவாடிவரும் இத்தகைய தலைவர்களிடம் தமிழ் மக்கள் வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது.

இன்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன தலை வலப்புறத்தில் திரு. தொண்டமானையும், இடப்புறத்தில் திரு. அமிர்தலிங்கத்தையும் வைத்துக்கொண்டு மீண்டும் ஜனாதிபதியாவதற்கு தயாராகி வருகிறார். இந்த முக்கூட்டுத் தலைவர்களின் சுயரூபத்தைச் சகல மக்களுக்கும் அம்பலமாக்குவது மட்டுமன்றி சகல வழிகளிலும் யூ.என்.பியும் ஜே.ஆர்.ரும் அதிகாரத்திற்கு வருவதை மக்கள் அனுமதிக்காதவாறு மக்களுக்கு உண்மைகளை விளங்கச் செய்ய வேண்டும்.

எதிர்க்கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலில் தத்தமது கட்சி அபேட்சகர்களை நிறுத்துவதுபற்றிப் பேசிவருகின்றன. ஆனால் நாடுதழுவிய ரீதியில் எழுந்துவரும் மக்களின் யூ. என். பி. எதிர்ப்பு அலையானது தனிஒரு அபேட்சகர் நிறுத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்தை வெளிக்காட்டுகின்றது. எனவே ஒவ்வொரு கட்சிகளையும் ஆதரிக்கும் மக்கள் தனி ஒரு அபேட்சகர் நிறுத்தப்படல் வேண்டும் என்ற கோரிக்கையை தத்தமது கட்சிகளில் பிரதிபலிக்கச் செய்யும்முயற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும். ஜே. ஆர்.ருக்கு எதிராக உண்மையான யூ. என். பி. விரோத சக்திகள் ஒன்றிணைந்து பொதுவேலைத் திட்டத்தின் அடிப்படையில் தனி ஒரு அபேட்சகரை நிறுத்துவதையே எமது கட்சியும் வலியுறுத்துகிறது.

தற்போதைய வடபகுதி நிலைமைபற்றிதோழர் செந்திவேல் எடுத்துக் கூறுகையில், அரசினால் ஏவப்பட்டுள்ள ஆயுதப்படைகளின் அத்துமீறிய செயல்களால் வட பகுதி மக்கள் அடுத்த நிமிடம் என்ன நடக்குமோ என்ற பயப்பீதியுடனும், ஏக்கத்துடனும் ஒவ்வொரு நாளையும் கழிக்கும் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது ஒன்றாகும். அரச ஆயுதப் படைகளின் அத்துமீறிய செயல்கள் ஒருபுறத்தில் வளர்ந்துகொண்டுசெல்ல மறுபுறத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின்மீது சாதிவெறி கொண்டோர் தமது கைவரிசைகளைக் காட்டிவருகின்றனர். அண்மையில் சிறுப்பிட்டி, புன்னாலைக்கட்டுவன் போன்ற பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் மோசமாக தாக்கப்பட்டு, கொலைகள் இடம்பெறும் அளவுக்கு நிலைமைகள் மோசமாகியுள்ளன. இவ்விடயத்தில் பொலிசார் ஒருதலைப்பட்சமாக நடந்து வருகிறார்கள் என்றும் தெரியவருகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் தமது நியாயமான உரிமைகளுக்காக நடத்தும் சகல போராட்டங்களிலும் கடந்த காலத்தைப்போல் கம்யூனிஸ்ட்கட்சி அவர்களின் பக்கத்தில் உறுதியாக நிற்கும் என்றும் தனது உரையில் குறிப்பிட்டார்.

## ஜனாதிபதித் தேர்தல் எவ்வாறு ......

1-ம் பக்கத் தொடர்...

யாழ். மாவட்ட தேர்தலில் நடந்தவற்றை யாரும் மறந்துவிட முடியாது. பெருமளவில் நாடுபரந்த காடைத்தனமும், அடக்குமுறையும், ஒழுங்குதவறிய முறைகளும் 1977க்குப் பிறகு இலங்கையின் தேர்தல்களில் அசாத்தியமானவை அல்ல. ஆகவே சகல முற்போக்கு சக்திகளும், தேசபக்தசக்திகளும், ஜே.ஆர்.ரை முறியடிக்கக் கூடிய ஒரே வேட்பாளர் யாரோ அவருக்குப் பலமான ஆதரவை வழங்குவது அவசியம். ஜே. ஆர். வென்றால் அதன்பின் அபிப்பிராய வாக்கெடுப்புமூலம் பாராளுமன்றத் தேர்தலைப் பின்போடலாம், அபிப்பிராய வாக்கெடுப்புகளில் வாக்களிப்புச் சாவடிகளில் எதிர்க்கட்சியினர் இருக்கமாட்டார்கள். ஆகவே பெட்டிகளை நிரப்புவது கஷ்டமான காரியமல்ல. அத்தகைய ஏற்பாடு த. வி. கூட்டணிக்கும் மிகவும் வசதியானதாக இருக்கும். மைத்திரிபால கூட்டத்தை ஸ்ரீ ல. சு. க. என அங்கீகரிப்பதன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் (சிறிமாவோ அணி) மற்ற நான்கு எம். பி.க்களைப் பதவி நீக்கலாம். அதன்பின் இஷ்டப்படி ஒரு தேசிய பொம்மை அரசாங்கத்தை ஏற்படுத்தலாம். இது வெறும் கற்பனை அல்ல. சாத்தியமான ஒரு ஆபத்து. அல்லது பாராளுமன்றத் தேர்தலில் தில்லுமுல்லுகள் (பலமான எதிர்க்கட்சிகளது வேட்பு மனுக்களை நிராகரிப்பது, மற்றும் 1981 மாவட்டத் தேர்தலில் பயிற்சி பெற்ற விஷயங்கள்) மூலம் மீண்டும் ஆட்சிக்கு வர முனையலாம். இரண்டாவது நிலைமைபற்றி ஜனாதிபதி தேர்தலின் வாக்களிப்பை வைத்தே யூ.என்.பி. முடிவுக்கு இறங்கும், ஆயினும் சர்வ அதிகாரம்பெற்ற ஜனாதிபதியாக ஜே. ஆர். வந்தபிறகு அதிகாரமற்ற பாராளுமன்றம் யார் கையில் இருந்தால் என்ன? யூ. என். பி. கையில் என்றால் தங்கள் 'ஜனநாயக' ஏமாற்று வேலையை கொஞ்சம் நீடிக்கலாம். அல்லாவிட்டால் விரைவாகவே ஜனாதிபதியின் சர்வாதிகாரம்ஏதோ விதத்தில் ஏற்படலாம். ஆகவே பாராளுமன்ற ஜனநாயகத்தின்பேரில் இன்னும் எஞ்சியிருக்கும் சில ஜனநாயக உரிமைகளையும், தொழிற்சங்க உரிமைகளையும், நமது நாட்டுமக்களது சட்டரீதியான உரிமைகளைக் காக்கவும், மேலும் உரிமைகள் பறிபோகாமல் தடுக்கவும் யூ. என் பியை ஜனாதிபதித் தேர்தலில் முறியடிப்பது மிகவும் முக்கியம். தமிழ்பேசும் மக்கள் 1977 ஆகஸ்ட், 1981யூன் இனவாத வன்செயல்களை நினைவுகூர்வது பயனுள்ளது. அரசாங்கமே இனவெறியர் கட்கும் கலவரங்கட்கும் தூபமிட்ட சூழ்நிலையை யூ.என். பி.யின் கீழேதான் இந்த நாடு கண்டுள்ளது. இந்தக் கடந்தகால கசப்பான அனுபவங்களைத் தமிழ் மக்கள் தமிழர்கூட்டணி, தொண்டமான் போன்ற யூ. என் பி. யின் சகபாடிகளுக்கூடாக அல்லாது சுதந்திரமான சிந்தனைமூலம் புரிந்து கொள்வது அவசியம்: முதலாளித்துவ பாராளுமன்ற மாயை கலைவது ஒரு விஷயம். ஆனால் சாதாரணமான ஜனநாயக, குடியியல் உரிமைகள் சிதைக்கப்பட்டு பறிக்கப்படுவது இன்னொரு விஷயம். யூ என். பி யை முறியடிப்பது பின்னைய விஷயத்தைச் சார்ந்தது. இதை நாட்டின் சகல மக்களும் ஆழ்ந்த கவனத்திற்கு எடுத்துக்கொள்ளல் வேண்டும். ★

## தாழ்த்தப்பட்ட மக்கள்

1-ம் பக்கத் தொடர்

மக்களுக்கு நன்கு எடுத்துக் காட்டியது.

சிறுப்பிட்டிப் பகுதியில் சாதித்திமிரின் இறுமாப்புதன் வேலையைச் செய்யமுற்பட்டுள்ளது. ஐம்பத்தைந்து குடும்பங்களுள்ள அப்பகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் சாதித்திமிர் கொண்டோரின் தோட்டங்களில் வேலை செய்வதையும், ஏனைய வேலைகளையும் நிறுத்திக் கொண்டனர். வேலைக்குச்செல்லாது இந்நிலை தற்போது மூன்றுமாதங்களை அண்மித்துவிட்டது. மக்கள் தமது ஐக்கியத்திலும், போராட்டத்திலும் மிக உறுதியாகவே உள்ளனர். சாதிவெறிகொண்டோர் தமது தோட்ட வேலைகளை செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். குறைந்தளவு வேலைகளை தாமே செய்யும் பரிதாப நிலைக்கும் வந்துள்ளனர்.

இங்கே குறிப்பிடக்கூடிய விஷயம் யாதெனில் கடந்த பொதுத்தேர்தல் காலத்திலும், மாவட்ட சபைத் தேர்தல் காலத்திலும் இப்பகுதி தாழ்த்தப்பட்ட மக்களின் மத்தியில் 'தேர்தல்கால சமத்துவம்' பேசி வாக்குப் பெற்றுச் சென்ற தமிழர் கூட்டணித் தலைவர்களோ அன்றிப் பிரமுகர்களோ இப்பகுதிகளுக்கு இன்றுவரை தலைகாட்டவில்லை. ஏன்? இதற்கு மக்களே விடையையும் தற்போது கண்டுள்ளனர். இன்று பற்பல விடயங்களுக்காக கதறியழுது, கண்ணீர் வடித்து —அறிக்கைகள் விட்டு அனுதாபம் செலுத்தும் தமிழ்த் தலைவர்கள் ஒரு நேர்மையான தாழ்த்தப்பட்ட மகன் நியாயம் கேட்ட குற்றத்திற்காக மிக அநாகரிகமான முறையில் கால் கைகள் துண்டாடப்பட்டு கோரமாகக் கொலைசெய்யப்பட்டது பற்றி இதுவரை வாய் திறக்காது இருக்கிறார்கள் என்றால் இத்தலைவர்களை தாழ்த்தப்பட்ட மக்கள் தமது தலைவர்களாகக் கருத முடியுமா?

சாதிவெறியினாலும். தீண்டாமைக் கொடுமையாலும் பாதிக்கப்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நாம் ஒன்றை உறுதியாகக்கூறி வைக்க விரும்புகின்றோம். அதாவது தாழ்த்தப்பட்ட மக்கள் தமது அடிமைநிலையை அறுத்தெறிந்து உரிமை பெற்றவர்களாய்த் தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமானால் தமதுசொந்த பலத்திலும், சொந்தப் போராட்டத்திலும் காலூன்றி நின்று விட்டுக் கொடுக்காத போராட்டங்களைச் சரியான வழிகளில் முன்னெடுப்பதே சரியான பாதையாகும்.

7-ம் பக்கத் தொடர்

காரி ஏற்கனவே இந்தத் தொண்டர் ஆசிரியர் பிரச்சினையால் 'சூடுகண்ட பூனை' எனவே அதிபர்களுக்கு 'நீங்கள் தொண்டர் ஆசிரியர்களை நியமியுங்கள்; ஆனால் 'பிரச்சினை வரக்கூடாது' என்று புத்திமதி கூறுகின்றனர்.

'பிரச்சினை' என்பது அவர்கள் நியமனம் நிரந்தரமாக்குவதுபற்றி எம்மிடம் உத்தரவாதமில்லை என்பதே. எனவே அவர்கள் போராடாமல் பார்த்துக்கொள்வதே புத்தியின் தாற்பரியம், உண்மை என்ன? பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை, அதனைத் தவிர்க்கத் தொண்டர் ஆசிரியர்களை நியமிப்பது தவிர்க்க முடியாதது என்பதனை அங்கீகரிக்கின்ற கல்வித்திணைக்களம் அவர்களது நியமன நிரந்தரத்தில் மாத்திரம் ஒன்றும் தெரியாததுபோல மௌனியாகிவிடுகிறது.

ஏற்கனவே மலையகத்தில் தொண்டர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட பலர் ஒரு வாரத்திலேயே நியமனம் பறிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் பரவலாக கூறிக் கொள்ளப்படுகிறது.

அச்சுப்பதிப்பு : யாழ்ப்பாண அச்சகம், 407 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
வெளியீடுபவர்: சி. நவரத்தினம், 15 / 1 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.